
# ஞானம்



இலக்கிய
மாத இதழ்

ஆவணி
புரட்டாதி 97

# ஒரு கவிதை

●

கூடுதிரும்பின பறவைகள்
அந்தியின் கடைசி வெளிச்சத் துளி
தெரு முனையில்
தொலைதூரம் விழிநீளம் காத்திருக்கும்
அம்மாவின் முகத்தில்
இருள் ஏற்றுகிறது


மூடப்பட்ட பாடசாலைக் கதவுகளில்
வெறுமை
வகுப்பறைகளில் நிராசையின்
கோலம்

அவன் வீடு திரும்பவில்லை
நாடு கலங்கிற்று ஒருநாள்

இரும்பின் தடங்களும், ஈயக்குண்டுகளும்
எரியும் நெருப்பும் சூழ அவன்
எதிரியின் தளத்தை நொருக்கியபோது
காற்றில் கோவில்மணி அலறிற்று
வீட்டில்
கண்ணீர் அலையென ஓடிற்று

அவன் சொன்ன வார்த்தைகளும் இல்லை
எங்களுக்கு சொல்ல வார்த்தைகளுமில்லை.

●



# ழகரம்

**ழகரம் 3**

**ஆக்கமும்**
**தொகுப்பும்:-**
*ழகரம் ஆசிரியர் குழு*

**உள்ளே:-**

என். கே. மகாலிங்கம்
D. B. S. ஜெயராஜ்
சக்கரவர்த்தி
சேரன்
வ. ந. கிரிதரன்
ரிஷி
சுதா. சுப்பிரமணியம்
ப்ரணவன்
அமிதகன்
ஞான ஆனந்தன்
வசந்திராஜா
அடோனிஸ்
பிரியந்த்
கரிச்சான் குஞ்சன்
இளங்கறுவல்

**இவர்களுடன்**
பொ. விவேகானந்தன்
திருமாவளவன்
அ. கந்தசாமி

**ஓவியம்:**
கருணா

**முகப்போவியம்:-**
ஜாமின் - ராய்

**வெளியீடு:**
ழகரம் வெளியீட்டு நிறுவனம்


**25, Dowswell Dr**
**Scarborough, Ontario**
**M1B 1H5**
**(416) 412-1951**
**(416)694-4304**
**(416)261-6123**


*புலப்பெயர்வு என்பது பூமரங்களின் விருப்பமல்ல. விதிக்கப்பட்டது.*

*பங்குனி வெய்யில், சோளகக் காற்று, மாரிமழை, மார்கழிப்பனி என்று சுகந்தங்களை நெட்டுயிர்க்கும் நெஞ்சங்களின் உயிர்த்தரிப்பிற்கான உத்தரிப்பு.*

*புதிய களனிகளில் நாற்றுக்கள் வேர்விடுமுன்னரே களைகள் விகிதாசாரத்தை மீறிய விபரீதங்களாய் தழைத்தெழுவது பற்றி கவலைப்படுவதெல்லாம் வீண் காலவிரையம்.*

*வந்த இடத்தில் வாழ்க்கையை நேசிக்க, உபாசிக்க கோடியாய்ப் பல உண்டு. ஆனால் கால் பதித்த தமிழன் அறுகம்புல்லையும், மாவிலையையும், வாழைஇலையையுமே முதலில் இறக்குமதி செய்தான் என்பதே வரலாற்றின் அகரமாய் ஆனது.*

*யாழ்நூலகத்தில் எழுந்த புகைஇழைகள் சர்வதேச நாசிகளில் புரைக்கேறியதே எங்கள் புலப்பெயர்விற்கான சாதக அம்சம்.*

*கனடா வந்த தமிழனோ தன் மகிழ்ச்சியை தேடகம் நூலகத்தில் சொக்கப்பனை கொழுத்திக் கொண்டாடினான்.*

*நாகரீக நெஞ்சங்களில் இன்னும் கனன்று கொண்டிருக்கும் அந்த அக்கினியை எந்தப் புயல் வீசி அணைக்கும்? எந்த மேகம் வந்து தணிக்கும்?*

*புலம்பெயர்ந்த வாழ்வு ஒரு தலைமுறையின் திக்குத் திசை அறியாப் பயணமாய்ப் போயிற்று.*

*பழைய பாசிச முகங்கள் பல புதிய ஒப்பனைகளோடு.*

*கழிவுப்பொருட்கள் கலாச்சாரப் பூச்சுக்களோடு.*

*தமிழர்களுக்கெனறு தனியாக 89 அமைப்புகள் இங்கு உண்டு என்ற நேற்றைய தகவல், கடிதத்தாள் அமைப்புக்களால் இக் கணத்தில் கணிசமாய் உயர்ந்திருக்கக் கூடும்.*

*அடுத்தவன் மரணத்தில் சுகிக்கும் நுண்கிருமிக் கூட்டம் மனிதர்களாய்ப் பெருகுவது தான் இன்றைய அவலம்.*

*போராளிகளின் இறப்பின் எண்ணிக்கை இறங்கும்போது பேரானந்தம். எதிரிகள் தரப்பில் அழிவு அதிகரிக்கும்போது புழகாங்கிதம்.*

*ஒவ்வொரு உடல் மண்ணில் சாயும்போதும் யாரோ ஒரு பெற்றவளின் வயிற்றில் எழும் பிரளயக்கினியை யார் உணர்வார்?*

*மனிதன் மரணத்தை நேசிக்கும் வல்லூறாக, மனிதம் மரணித்துக் கொண்டிருக்கிறது.*

**ழகரம் குழு**

# அமரர் அ. ந. கந்தசாமியின் பன்முக இலக்கிய ஆளுமை

வ. ந. கிரிதரன்

*'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்' என்ற நூலில் (மௌனகுரு, சித்திரலேகா, நுஃமான்) அறிஞர் அ.ந. கந்தசாமி பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.*

*"1940ஆண்டிற்குப் பின் குறிப்பாக 1942ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சில இலக்கிய ஆர்வமுடைய இளைஞர்கள் சேர்ந்து மறுமலர்ச்சிச் சங்கம் என்ற ஒரு இலக்கிய ஸ்தாபனத்தை அமைத்ததைத் தொடர்ந்து பாரதிதாசன், கலைவாணன் போன்ற அக்காலத்து தமிழ்நாட்டு முன்னணிக் கவிஞர்களின் செல்வாக்கினால் தூண்டப்பட்ட சில இளம்கவிஞர்களின் முயற்சியினால் இங்கு நவீன கவிதைப் பாணி உருவாகி வளர்ச்சி அடையத் தொடங்கியது. நாவற்குழியூர் நடராசன், சோ. நடராசன், அ.ந.கந்தசாமி, மகாகவி, சாரதா, செ. சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணன் ஆகியோர் இக்காலப்பகுதியில் கவிதை எழுதத் தொடங்கினர். இவர்களுள் நாவற்குழியூர் நடராசன், அ.ந. கந்தசாமி, மகாகவி ஆகிய மூவரும் இக்காலப்பிரிவில் தோன்றிய முக்கியமான கவிஞர்கள்" (பக்கம் 21-21)*

*"இலங்கைத் தமிழ்க் கவிதையில் இடதுசாரிச் சிந்தனைப் போக்கை முதலில் பிரதிபலித்தவர் அ.ந. கந்தசாமியே ஆவர். 'கவீந்திரன் என்ற புனைபெயரிலும் இவர் கவிதைகள் எழுதி வந்தார். ஏராளமாக எழுதாவிட்டாலும்' 'வில்லூன்றி மயானம்' 'துறவியும் குஷ்டரோகியும்' போன்ற இவரது கவிதைகள் குறிப்பிடத்தக்கன" (பக்கம் 21)*

*"இக்காலப்பகுதியில் (மறுமலர்ச்சி) சிறுகதை உலகில் புகுந்த எழுத்தாளர்களுள் அ.செ.மு, தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, கனக. செந்திநாதன், தாழையடி சபாரத்தினம், சொக்கன், சு. வேலுப்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்....... ஈழத்து இலக்கியத்தில் இடதுசாரிச் சிந்தனையை அறிமுகப்படுத்திய அ.ந.கந்தசாமி சுமார் அறுபது கதைகள்வரை எழுதியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இரத்த உறவு, 'நாயினும் கடையர்' போன்ற இவரது கதைகளை ஈழத்து விமர்சகர்கள் புகழ்ந்து பேசுவர்" (பக்கம் 62-63)*

*"அ.முத்துலிங்கத்தின் 'சுவர்கள்', பிரிவுப்பாதை, சொக்கனின் 'இரட்டை வேஷம்', அ.ந.கந்தசாமியின் 'மதமாற்றம்' என்பன பேராசிரியர் மரபில் பல்கலைக்கழகம் மேடையேற்றிய நாடகங்களாகும். இவற்றுள் அ.ந.கந்தசாமியின் 'மதமாற்றம்' குறிப்பிடத்தக்கது" (பக்கம் 88)*

*"ஈழத்து இலக்கிய விமர்சனத்துறையில் தேசிய இலக்கியக் கோட்பாட்டைப் பிரச்சாரப்படுத்துவதில் முன்னணியில் நின்ற விமர்சகர்களே 50, 60 களில் இலக்கிய விமர்சனத்தில் முற்போக்குவாதத்தை, அல்லது மார்க்ஸிய அணுகுமுறையைப்*

பிரயோகித்தனர். க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகிய இருவரும் இதில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர்கள். அ.ந.கந்தசாமி, கே.கணெஷ், இளங்கீரன், ஏ.ஜே.கனகரத்தின, பிரேம்ஜி, சில்லையூர் செல்வராசன், எச்.எம்.பி முகையதீன் முதலியோரும் இலக்கிய விமர்சனத்தில் முற்போக்குக் கண்ணோட்டத்தைப் பயன்படுத்தினர்" (பக்கம் 108)

'ஈழத்து இலக்கியம்: பல்துறை நோக்கில்' சோமகாந்தன் பின்வருமாறு கூறுவார். "இலட்சியப் பித்தர்கள் என்ற இலட்சியத்தோடு தோற்றுவிக்கப் பெற்ற மறுமலர்ச்சி சஞ்சிகை வாயிலாகவும், மற்றும் சிறப்பிதழ் களிலும் இலக்கியத்தின் நோக்கம், அது கையாளப்படவேண்டிய மொழி, இலக்கியம், சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணி, பற்றி அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தன், கே. கணேஷ், இலங்கையர்கோன், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை முதலியோர் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதி சமூகப் பிரக்ஞை கொண்ட இலக்கிய திறனாய்வு முயற்சிகள் பின்னர் வளர்வதற்கு தளமிட்ட முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்" (பக்கம் 38)

மேற்படி கூற்றுக்களிலிருந்து அறியக்கூடிய முதலாவது உண்மை அறிஞர் அ.ந.கந்தசாமியின் பன்முகப்பட்ட ஆளுமைதான். கவிதை, நாடகம், சிறுகதை, விமர்சனம் போன்ற பல்வேறு துறைகளிலும் கால்பதித்தவர் மட்டுமல்ல, அத்துறைகளில் முன்மாதிரியாகவும் திகழ்ந்தவர் தான் அ.ந.க. கவிதை, நாவல், நாடகம், தமிழ் இலக்கியம் பற்றிய இவரது விமர்சனக் கட்டுரைகளாகட்டும் (பண்டிதர் திருமலைராயர் என்ற பெயரில் இவர் எழுதிய சிலப்பதிகாரம் பற்றிய கட்டுரைகள், மற்றும் திருக்குறள் பற்றிய கட்டுரைகள் பலத்த வரவேற்பைப் பெற்றவை. தமிழக, மலேசிய சஞ்சிகைகளில் மறுபிரசுரம் செய்யப்பட்டவை) கவிதைகளாகட்டும், சிறுகதைகளாகட்டும் எல்லாமே அவரது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துவன. சமூகத்தில் நிலவும் அநீதிகளை மிகவும் வன்மையாகச் சாடுபவை. நெஞ்சத்தைக் கொள்ளும் துள்ளிவரும் தெள்ளு தமிழ்நடை இவரது மற்றுமொரு சிறப்பு. இவரது நாடகமான 'மதமாற்றம்' வெளிவந்த காலத்தில் பெருஞ்சர்ச்சையைக் கிளப்பிய அதேசமயம் பெரும் வரவேற்பையும் பெற்றது. பலமுறை மேடையேற்றம் செய்யப்பட்டது. லபீஸ் வீரமணிக்குழுவினரால் சிறப்பாகச் செய்யப்பட்ட நாடகம் தான் "மதமாற்றம்" பின்னர் நூலாகவும் வெளிவந்தது.

இன்றைய தலைமுறையினர் அ.ந.க.வைப் பற்றி அறிந்திருப்பது மிகவும் அவசியம். இலங்கைத் தமிழ் இலக்கிய வானில் சுடர்விட்டுப் பிரகாசித்து, இளம் வயதிலேயே மறைந்துவிட்ட அ.ந.க. வின் பங்களிப்பைச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், விமர்சனம், மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளில் இவரது பங்களிப்பையும், பத்திரிகைத் துறையில் இவரது ஈடுபாட்டையும், இளம் எழுத்தாளர்களிடையே மீதான இவரது பாதிப்பையும், மிகச் சுருக்கமாக இக்கட்டுரை ஆராயும்.

*சிறுகதை........*

அ.ந.க.வின் சுமார் 60 சிறுகதைகள் வரை வெளிவந்திருக்கலாமென அறியப்படுகின்றது. இவற்றில் குருட்டு வாழ்க்கை, ஐந்தாவது சந்திப்பு, பரிசு, இரத்த உறவு, உலகப் பிரவேசம், ஸ்ரீதனம், கொலைகாரன் காளிமுத்து இலங்கை வந்த கதை, நாயினுங்கடையர், உதவி வந்தது, வழிகாட்டி, பிக்பொக்கற், சாகும் உரிமை, புதுப்புனல், பாதாள மோகினி, நள்ளிரவு ஆகியனவே கிடைக்கக் கூடியதாகவுள்ளன. இவரது சிறுகதைகளின் கருப்பொருட்களாக சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், மதம், மலையக மக்களின் பிரச்சினைகள், காதல், கலை, போன்ற விடயங்கள் காணப்படுகின்றன. பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுவது போல் 'அ.ந.கந்தசாமியின் கதைகள் வன்மையாகச் சமூகத்தைத் தாக்குபவை.

*சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வை நன்கு புலப்படுத்துவதில் சமர்த்தர் இவர்' ('தமிழ் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்' நூலில்) 'அ.ந.க.வும், அ.செ.மு.வும் அசல் யாழ்ப்பாணிகள். தோட்டக்காட்டார் என்ற மலையகத் தொழிலாளர்களுக்காக இருவரின் பேனா முனைகள் எமது காலத்திற்கு முன்பே போர்முனைகளாயின்' என்பார் அகஸ்தியர் (அ.ந.கவும் அ.செ.மு.வும் அசல் யாழ்ப்பாணிகள் கட்டுரையில்)*

*நாவல்:*

*நாவல்துறையில் அ.ந.க. தனது இறுதிக்காலத்திலேயே ஈடுபடத்தொடங்கினார். 67-68 காலப்பகுதியில் தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த இவரது 'மனக்கண்' நாவல் பெரும் வரவேற்பைப் பெற்ற நாவல். நூலாக இதுவரையில் வெளிவரவில்லை. இவரது நண்பரும், சக எழுத்தாளருமான சில்லையூர் நடராசனால் வானொலி நாடகமாகவும் தயாரிக்கப்பட்டு, ஒலிபரப்பப்பட்டுப் பெரும் ஆதரவைப் பெற்றநாவல் மனக்கண். இந்நாவலைப் பற்றி அந்தனி ஜீவா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

*"மனக்கண் நாவல் தினகரனில் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்தபோது ஆயிரக்கணக்கான வாசகர்கள் ஆவலுடன் விரும்பிப் படித்தார்கள். இவர்கள் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளில் வெளிவந்த தொடர்கதைகளை விரும்பிப் படித்தவர்கள். ஈழத்து எழுத்தாளர்களின் கதைகளின் பக்கம் கூட தலைவைத்துப் படுக்காதவர்கள்கூட 'மனக்கண்' நாவலைத் தொடர்ந்து விரும்பிப் படித்து வந்தார்கள். "மனக்கண்" என்ற நாவல் தொடர் கதையாக வெளிவந்ததால் அதன் இலக்கியத் தரத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. தொடர்கதை மூலம் வாராவாரம் வாசகனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் அ.ந.க. 'மனக்கண்' என்ற நாவலை எழுதவில்லை. யதார்த்தமாக இருக்க வேண்டும் என்ற நோக்குடன் எழுதினார். 'மனக்கண்' நாவல் இலக்கியத்திற்குக் கிடைத்த அரிய பொக்கிஷம். ...அ.ந.க. இன்னும் ஓரிரு ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தால் 'மனக்கண்' நாவலிலும் பார்க்க சிறந்த நாவல்களை நமக்குத் தந்திருப்பார். ஈழத்துத் தமிழ் நாவல்களைப் பற்றி எழுதும் எந்த விமர்சகரும் அ.ந.க. வை மறந்துவிட மாட்டார்கள். அந்த அளவிற்கு ஒரே ஒரு நாவலின் மூலம் தன் ஆளுமையைக் காட்டிச் சென்றுள்ளார். கம்பனுக்கு ஒரு காவியம் போல், வள்ளுவனுக்கு ஒரு திருக்குறள் போல், அ.ந.க. விற்குஒரு 'மனக்கண்' என்றே துணிந்து கூறலாம். (சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன் 'அ.ந.க.' கட்டுரைத் தொடரில்)*

*"மனக்கண் நூலாகாத குறையை நிவர்த்திக்கு முகமாக அதை வானொலி நாடகமாக்கி வாரந்தோறும் ஒலிபரப்பிய சில்லையூர் செல்வராசன் அ.ந.க.வைத் தக்க முறையில் கௌரவித்தமை செல்வராசனுக்குப் பெருமை சேர்த்தது. எனினும் அது நூலாக வரும்வரை தாகம் தணியாது" என்பார் எஸ். அகஸ்தியர்.*

*'மனக்கண்' தவிர எமிலிசோலாவின் 'நாநா' நாவலை மொழிபெயர்த்து சுதந்திரன் பத்திரிகையில் வெளியிட்டார். இது தவிர அ.ந.க.வின் சிறுவர் நவீனமான 'சங்கீதப் பிசாசு' வும் வெளிவந்தது. சிரித்திரனின் சிறுவர் சஞ்சிகையான 'கண்மணி' யிலும் பின்னர் இது மீள் பிரசுரம் செய்யப்பட்டது. இறுதிக்காலத்தில் அ.ந.க. மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை வைத்துக் 'களனி வெள்ளம்' என்ற நாவலை எழுதிக் கொண்டிருந்ததாக அறியப்படுகின்றது. செ. கணேசலிங்கனிடம் அ.ந.க. வின் இப்படைப்பு இருப்பதாகவும் அறியப்படுகின்றது.*

*(தொடரும்)*

# விடுமுறை

வசந்தி ராஜா

அம்பாரமாய்
கழுவ வேண்டி தவங்கிடக்கும்
பாத்திரக் குவியல்.
குளியலறையில்
தெறித்த நுரையின் படிமானம்
உடல் உரஞ்ச உறுத்தும்
வெட்டப்படாத நகநீட்டம்
பழகிய யன்னல்.
அதே இருக்கை
சரிந்து விழும் வெற்றுத்தாள்

கவிதை ஜனனத்துக்காய்
எழும் முனகல்.
ஊர் நினைவுகளில்
ஊரும் முகில்திரைந்த வானம்.
கதவொலியில் கரையும்
பகற்தூக்கம்.
கழுவக் காத்திருக்கும் கண்ணாடி
உறுத்தும் நகம்
நுரையின் தெறிப்பு
வந்து வந்து தொடரும் இம்சை

வெறுமையில்
கழிந்து போகிறது
விடுமுறையின் ஆரம்பநாள்.

# வெகுஜன வாராந்திரிகள்

-ரிஷி

*றொறன்ரோ நகரிலுள்ள வேலைத்தளத்தில், உணவு இடைவேளையின் போது தமிழ்ப்பசி தீர்க்க, தமிழகத்தின் பிரபல வாரப் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தபோது, அருகிலிருந்த வெள்ளைக்கார நண்பன் குறும்பாக கண் சிமிட்டியபடியே கேட்டான் " ஓ! நண்பனே காதல் லீலைகளைக் (PORNOGRAPHY) கரைத்துக் குடிக்கிறாய் போலும்!" முன், பின் அட்டைகள் மற்றும் நடுப்பக்கங்களில் வண்ண வண்ணமாய் சினிமா நடிகைகளின் கவர்ச்சிப் படங்கள் மட்டுமே ஆண்டாண்டு காலமாய் பிரசுரிக்கும் குடும்பப் பத்திரிகை அது. கேலிசெய்தவன் மேல் சத்தியமாய்த் தப்பில்லை. மொழிதெரியாதவர் பத்திரிகையைப் பார்க்க நேர்ந்தபோது ஏற்பட்ட முதல் உணர்வு இது.*

*ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன தனித்தனியே அறிவியல், அரசியல், சினிமா, இலக்கியம், விளையாட்டு, பாலியல், சுகாதாரம், கலை என வெவ்வேறு பொருள் குறித்தும் ஆண்கள், பெண்கள், சிறுவர், முதியோர், குடும்பத்தினர், என்போருக்கு வயது வாரியாகவும் ஏற்ற தரங்களிலும் வெளியிடப்படுகின்றன. அவரவர் வயது, தரம், ரசனைக்கு ஏற்றபடி வாசிப்பார்கள். ஆனால் பெரும்பான்மையான தமிழகப் பத்திரிகைகள் எல்லா விஷயங்களையும் கலந்து அவியலாக குடும்பப் பத்திரிகை என்ற பெயரில் வெளியிடுகிறார்கள். குறைந்த செலவில் நிறைந்த பயனைக் கொடுப்பதே இதன் நோக்கம். இதனால் எல்லாரும் (குடும்பத்தில் பாலர் முதல் முதியோர் வரை), எல்லாமும் (அறிவியல் முதல் பாலியியல் வரை) அறிய நேரிடுகிறது. இப்பத்திரிகைகளில், வாசகர்களைக் கவர்வதற்கு சினிமாக் கவர்ச்சியும், பாலியலும் மேலோங்கி நிற்கும். வயது வித்தியாசமின்றி வாசகர்களுக்கு மெல்லிய கிளர்ச்சியூட்டி விற்பனையை அதிகரிப்பதே இதன் நோக்கம். உதாரணமாக "மத்திய அரசின் பட்ஜெட்டில் துண்டு விழுமா" என்ற அரசியல் வினாவுக்கு கையளவு துண்டை மட்டுமே கட்டிக் கொண்ட சினிமா நடிகையின் கவர்ச்சிப் படத்துடன் விளக்கம் கொடுக்கும் தமிழகப் பத்திரிகைகளின் சமுதாயப்பணி மகத்தானது!*

*அடுத்ததாக தமிழக வாரப்பத்திரிகைகளில் தமிழ்க் கலப்படம் மனங் கலங்க வைக்கிறது. கதைகள், கட்டுரைகளில் தேவையற்ற ஆங்கில வார்த்தைப் பிரயோகங்களும், தலைப்புகளும் கேலிக்குரிய அளவில் நிறைந்து வருகின்றன. நவீனம் என்ற பெயரில் தமிழையும் ஆங்கிலத்தையும், கதைகள், கட்டுரைகளில் தேவையின்றிக் கலந்து இரண்டு மொழியையும் கேவலப்படுத்துகிறார்கள் குழப்புகிறார்கள்.*

*ஆனந்த விகடன் பத்திரிகையில் சுவாமி சுகபோதானந்தா எழுதும் அருமையான வாழ்வியல் கட்டுரையின் தலைப்பு, "மனசே, ரிலாக்ஸ் ப்ளீஸ்". இக் கட்டுரைத் தொடருக்கு "மனமே கலங்காதே" அல்லது "அமைதி கொள் மனமே" போன்ற தமிழ்த் தலைப்புகள் ஆங்கிலத்தைவிட அழகானவையே. குமுதத்தில் "லைட்ஸ் ஆன்" என்றால் ஆனந்த விகடனில் "ஸைட்ஸ் ஆன்" "இளமை காம்பௌண்ட்"*

"மெடிக்கல்" "கவர் ஸ்டோரி" என்று முடிவற்ற மொழிக் கலப்படம். இதே வேகத்தில், பிரபல பத்திரிகைகளே தமிழ்க் கலப்படத்தில் போட்டியிட்டால் இருபத்தியோராம் நூற்றாண்டில் தமிழின் நிலை கவலைக்குரியதாகிவிடும். தமிழ் மொழியில் எந்த விஷயத்தையும் அழகாகவும், நவீனமாகவும் சுவைபடக் கூறமுடியாதா என்ன?

பிரபலமான தமிழக வாரப்பத்திரிகைகள் இரண்டுங் கெட்டான் நிலையில், தரம் குறைந்து காணப்படுவதற்கு மூல காரணங்கள், தேவையற்ற ஆங்கில மொழிக் கலப்பும், கீழ்த்தரமான சினிமாக் கிளர்ச்சியுமே. வாசகர்கள் இவற்றையே விரும்புகிறார்கள் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. கலப்பட வியாபாரிகள் போன்றோ, போதைவஸ்து விநியோகஸ்தர்கள் போன்றோ விற்பனை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு தமிழகப் பத்திரிகைகள் செயல்படுவது ஆபத்தானது. இதற்கும் மேலாக, வாசகர்களின் தரத்தை உயர்த்துதல், சிதைவின்றித் தாய் மொழியை வளர்த்தல் போன்ற சமுதாயக் கடமைகளும் பத்திரிகைகளுக்கு உண்டல்லவா?

---



அடோனிஸ்

எனது யுகம் பச்சையாகவே எனக்குச் சொல்கிறது;
நீ இவ்விடத்துக்கு உரியவனல்ல.
நானும் பச்சையாகவே சொல்கிறேன்;
நான் இவ்விடத்திற்கு உரியவனல்ல.
உன்னை விளங்கிக் கொள்ளவே முயல்கிறேன்.
நான் இப்பொழுது
பாலையில் தொலைந்து போய்
ஒரு மண்டையோட்டின் கூடாரத்துள்
பாதுகாப்புத்தேடும் ஒரு நிழல்.



## பாடையும் மேடையும்

*ஆடி 97 "மூகரம்" இதழில் கவிஞர் நிலா குகதாசனுக்கான கவிதையில் "பாடையிலும் மேடை போட" என்ற ஓசைநயம் மிக்க வரிகள் பொருள் பொதிந்த வையாக விளங்கின. நிலாவின் இறுதியாத்திரையைத் தமக் குரித்தான சுயவிளம்பரச் சடங்காக மாற்ற முற்பட்ட பிணந்தின்னிப் பறவைகளின் "திருக்"கூத் தினைத் துல்லியமாக எடுத்துக் காட்டிய வரிகள் அவை. திருவள்ளுவரின் பூதஉடலைத் தின்ற காக்கைகள் கூட்டம் பொன்னிறம் கொண்டன என்பது ஐதீகம். நிலாவின் புகழுடம்பைப் புசிக்க முற்பட்ட கனடிய காக்கைகள் கூட்டமோ சுயரூபம் அம்பலப்படுத்தப்பட்டு நிறச்சோகையுற்று வெளிறிப் போய்விட்டன.*

*பாடையை மேடையாக்கும் அரசியல் ஆதாயப்போக்கு தொன்றுதொட்டு நிலவும் ஒன்று தான். ஆங்கிலப் பேராசான் வில்லியம் ஷேக்ஸ்பியர் தன் ஜுலியஸ் சீசர் நாடகத்தில் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகிறார். சீசரைக் கொன்றவர்களில் ஒருவரான புரூட்டஸ் அம்மரணவீட்டில் உரையாற்றும்போது தமது சொல்வன்மையால் சீசர் குற்றவாளியே என்ற பிரமையைத் தோற்றுவிக்கிறார். ஆனால் சீசரின் நண்பன் மார்க் அந்தனி தமது இரங்கலுரையால் மக்கள் மனதை மாற்றி சீசர் நிரபராதி என்பதை நிரூபித்து மக்களை கொலையாளிகளுக்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்கிறார். "நண்பர்களே, ரோமானியர்களே என்னாட்டவர்களே".... என்ற அவரது பேச்சு நாவன்மைக்கொரு நல்ல சான்று.*

*தொழிற்சங்கவாதி கந்தசாமி கொல்லன்னாவையில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டபோது நாடு கொந்தளித்தது. இடதுசாரிகள் யாழ்ப்பாணத்தில் பாரிய இரங்கற் செயற்பாடுகளுக்கு ஏற்பாடு செய்தனர். அரசியல் காரணங்களுக் காக தமிழ் காங்கிரசும் போட்டி ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் கொழும்பு ரயில் நிலையத்துக்கு வந்து சந்தசாமி உடலைச் சகல மரியாதைகளுடனும் அனுப்பி வைத்தார். ஜீ.ஜீ.யாழ்ப்பாணம் வரவில்லையென்று தொலைபேசியில் அறிந்து இடதுசாரிகள் கவனக்குறைவாகிவிட்டனர். ஆனால் பொன்னம் பலமோ வேகமாகக் காரில் சென்று சாவகச்சேரியில் வைத்து ரயிலில் ஏறிக்கொண்டார். யாழ்ப்பாணம் வந்ததும் கந்தசாமியின் பூதவுடல் தாங்கிய பேழைக்கு கைகொடுத்தபடி இறங்கி அரசியல் ஆதாயம் தேடிக்கொண்டார்.*

*"கொடிகாமம்" ஐயா, உரும்பிராய் சிவகுமாரன், "டெவன்" தோட்டத்துச் சிவனு லக்ஷ்மணன் போன்ற வன்முறை காரணமான மரணங்களை வைத்துப் பல்வேறு தமிழ் கட்சிகள் வெவ்வேறு காலகட்டங்களில் அரசியல் பலன் அடைந்தன. 1977மட்டக்களப்பில் ராஜதுரை காசிஆனந்தன் ஆதரவாளரிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு பெண் சுட்டுக் கொல்லப்பட்டாள். மகன் காசிஆனந்தனின் ஆதரவாளர். கணவன் ராஜதுரையின் ஆதரவாளர். இருசாராருமே வீச்சுக்கல்முனை மயானத்துக்குத் திரண்டு வந்தனர். ராஜதுரையும் காசிஆனந்தனும் போட்டி போட்டுக்கொண்டு மண் அள்ளித் தூவினர்.*

*1987ல் எம்.ஜி.ஆர். இறந்தபோது ஜெயலலிதா சென்று உடலுக்கருகே நின்று*

கொண்டார். ஜானகி கோஷ்டியினர் அவரைத் துரத்துவதற்காக காலை மிதியோ மிதியென்று மிதித்துப் பாதங்கள் வீங்கிப் போய்விட்டன. பின்னர் எம்.ஜி.ஆர். உடலுடன் திறந்த வாகனத்திலும் பவனிவர முற்பட்டபோது குடத்தை ராமலிங்கத்தினால் இழுத்துக் கீழே தள்ளப்பட்டார் ஜெயலலிதா.

இவையெல்லாம் அரசியல் லாபம் கருதிச் செய்யப்பட்ட இழவு வீட்டு இழவுகள். ஆனால் கனடாவில் நடந்ததோ சுயவிளம்பரச் சீரழிவு. நிலாவின் எழுத்தாற்றலுக்கு விரிவான களம் அமைத்துக் கொடுத்தவர்கள் அவருடைய வீடியோ சஞ்சிகைக்குத் தோள் கொடுத்தவர்கள் போன்றோரை ஒதுக்கி விட்டு "வந்தான் வரத்தான்" எல்லாம் பாடையை மேடையாக்கிய அவலம்.

ஒரு மனிதன் 60 ஆண்டுகள் வாழ்ந்தாலும் இந்தக்கூட்டம் மொய்த்து விழா எடுக்கும். 60ம் வயதைப் பூர்த்தி செய்தாலும் விழா எடுக்கும். இளங்கவிஞன் 39 வயதில் மரணித்தான். அவனைச் சுப்பிரமணியபாரதி என்று சொல்லி மரணச்சடங்கை "சுயவிளம்பர விழாவாக்கும்" வேடிக்கை என்னவென்றால் இரங்கற் செய்தியில் ஒருமனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறான் என்பது முக்கியமல்ல அவன் வாழ்வில் எதனைச் சாதிக்கிறான் என்பதே முக்கியம் என்றும் சத்தியப்பிரமாணம் செய்வார்கள். வாழ்ந்த வருடங்களின் எண்ணிக்கை முக்கியமல்ல சாதித்தவையே முக்கியம் என்றால் "மணிவிழா" வுக்கான நியாயம் அடிப்பட்டுப் போகின்றதே............

## கணனியில் சீர்காழி

பேர் சொல்வதற்கு ஓர் பேரன் என்பார்கள். முன்னர் பாட்டனாரின் பெயரையே தலைப்பேரனுக்கு வைப்பார்கள். இப்போது அந்த நடைமுறை வழக்கொழிந்து போய்விட்டது. ஒரு காலத்தில் கானமழை பொழிந்து நம்மையெல்லாம் வசப்படுத்தியவர் அமரர் சீர்காழி கோவிந்தராஜன். "இசைமணி" யின் மகள் வயிற்றுப்பேரன் பாலாஜி பிரதாப். இவ்வரும்பு இளைஞர் அமெரிக்காவில் பெந்சில்வேனியாவில் அப்பர் மரியன் ஹைஸ்கூலில் படிக்கிறார். தனது பேரன் சீர்காழி கோவிந்தராஜன் நினைவாக மின்கணனித் தொடர்வலையாக்கத்துக்குள் ஒரு "தளப்பின்னல்" திறந்திருக்கிறார். தாய் ஞானி, தந்தை பிரதாப் ஆகியோருக்கு இது சமர்ப்பணம் என்று கூறியிருக்கிறார்.

12 ஏப்ரல் 97ம் ஆண்டு திறக்கப்பட்ட சீர்காழி கோவிந்தராஜன் தளத்துடன் கணனித் தொடர்பை மேற்கொண்டால் இசைமணியின் வாழ்க்கைச் சுருக்கம் கிடைக்கிறது. அவரது திரையிசைப் பாடல்கள் பெயரும் படமும் வரிசைக்கிரமமாகக் கிடைக்கிறது. சீர்காழியின் முக்கிய கச்சேரிகள் பற்றிய தொகுப்புக் கிடைக்கிறது. அவர் இசைத்தட்டு வரிசைகள் பற்றிய விபரம் கிடைக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக சீர்காழி கோவிந்தராஜனின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் சிலவும் கணனியில் உண்டு. சப்தத்தை உபாசிக்கும் சந்ததி என்று லா.ச. ராமாமிர்தம் வர்ணிக்கும் தற்காலத்தில் காதைப்பிளக்கும் ஒலி உபாதைகள் இன்றி சீர்காழியின் பாடல்கள் சிலவற்றைக் கணனி மூலம் செவிமடுக்கும் வாய்ப்பும் ஓர் சுகானுபவம்தான். அமுதும் தேனும் எதற்கு? கல்லிலே கலைவண்ணம் கண்டான்...... நெஞ்சில் உரமுமின்றி.........உள்ளத்தில் நல்ல உள்ளம் ...........கணபதியே வருவாய் போன்ற பாடல்கள் என்றும் இனியவை தான். இவற்றோடு சீர்காழியின், மற்றும் மகன் சிவசிதம்பரத்தின் கச்சேரிகளும் இக்கணனிச் சேவையில் உண்டு.

## சிவாஜி கணேசன்

சென்ற இதழில் சிவாஜி கணேசனுக்கின்னும் தாதாசாகேப் பால்கே விருது கிடைக்கவில்லை என்று குறைப்பட்டிருந்தேன். கிடைத்துவிட்டது (நம்மால் அல்ல)

*இந்திய சினிமாவுக்காக வாழ்க்கைகாலப் பங்களிப்பு என்ற ரீதியில் வழங்கப்படும் இந்த விருது ஏற்கனவே ராஜ்கபூர், அசோக்குமார், திலிப்குமார், நாகேஸ்வரராவ் போன்றோருக்குக் கிடைத்தபின் 69 வயதில் சிவாஜிக்குக் கிடைத்துள்ளது.*

*இதுவரையில் இந்தியாவில் சிறந்த நடிகருக்கான விருது சிவாஜிக்குக் கிடைக்கவில்லை. (எம்.ஜி.ஆர். -1, கமலகாசன்-3 சஞ்சீவ்குமார் - 2 மம்முட்டி - 2) 'தேவர்மகனுக்காக' சிறந்த துணைநடிகர் விருது கிடைத்துள்ளது. 1959ம் ஆண்டு வீரபாண்டிய கட்டபொம்மனுக்காக கெய்ரோவில் ஆசிய-ஆபிரிக்க சிறந்த நடிகர் விருது பெற்றவர் இவர். பின்னர் பிரான்ஸ்சின் உயர்ந்த "செவாலியே" விருது பெற்றவரும் சிவாஜி தான். விருதுகளும், பரிசுகளும், பட்டங்களும் இந்த நடிப்புலக மாமேதையின் வித்துவத்தை அளக்க முடியாது. ஆயிரம் விருதுகள் வந்து போனாலும் அல்லது வராமலே போனாலும் விழுப்புரம் சின்னையா கணேசனுக்கு நிரந்தரமாக நிற்பவை இரண்டு தான்.*

*ஒன்று அண்ணாத்துரை எழுதிய சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் நாடகத்தில் மராட்டிய மாவீரன் சிவாஜி வேடம் ஏற்றமைக்காகக் கிடைத்தது. திராவிடக்கழகத் தந்தை ஈ.வே.ரா. பெரியார் வி.சி.கணேசனைப் பாராட்டி 'நம்ம சிவாஜி' கணேசன் என்றார். இன்று வரை சிவாஜி கணேசனாக நிலைக்கிறது.*

*இரண்டாவது பேசும்படம் சஞ்சிகை வழங்கியது. 'நடிகர் திலகம்' பட்டம்.. 1952 "பராசக்தி" முதல் 1978 "தியாகம்" வரை தமிழ் சினிமாவின் நடிப்புச் சக்கரவர்த்தி நடிகர் திலகம் தான். சிவாஜி கணேசனின் திரைத் தோற்றமும் வளர்ச்சியும் தமிழ்த்திரையுலகின் பொற்காலத்துடன் பின்னிப் பிணைந்தே காணப்படுகிறது.*

*திரைநடிப்புப் பற்றிய மேலைத்தேய அளவுகோல்களைக் கொண்டோ அல்லது நடிப்புப் பற்றிய பயிற்சிப் பாசறைச் சான்றிதழ்களைக் கொண்டோ சிவாஜியைக் கணிப்பிட முற்படுவது எதிர்பார்த்த பலன்களைத் தராது. மேடைநாடகத்தின் தொழில்நுட்ப விரிவாக்கமே சினிமா என்ற கருத்தியல் நிலைப்பாட்டுக்கும் சினிமா என்பது கமராவின் மொழி என்ற கருத்தியல் நிலைப்பாட்டுக்குமிடையே ஒரு பாரிய இடைவெளி உண்டு.*

*இந்த இடைவெளியைத் தனக்கே உரித்தான ஏற்ற இறக்கங்களுடன், தழுவல் திரிபுகளுடன் கடந்து வந்துள்ளதே இன்றைய தமிழ் சினிமா. இந்த இடைப்பட்ட காலத்தைக் கடக்கும் முயற்சியே தமிழ் சினிமாவின் பரிணாம வளர்ச்சி. அதில் கிடைத்துள்ள வரையறைகளுட்பட்ட வெற்றியே அதன் முன்னேற்றப் பரிமாணம். இக்காலகட்டத்தின் மிகப்பெரிய ஆளுமைகளுள் ஒன்றாகவும் ஏறக்குறைய குறியீடு போலவும் விளங்குபவர் தான் சிவாஜி கணேசன்.*

*அந்தக் காலத்தமிழ் படங்களைப் பார்த்தால் நாடகத்தின் பாதிப்பு துலாம்பாரமாகத் தெரியும். வசனங்களைக் கத்திப் பேசுவது, முகபாவங்களை அதீதமாக மாற்றுவது, சிங்கார நடைபயில்வது போன்றவை மிக அதிகம். ஆரம்ப காலத்தில் சினிமாவும் இந்தச் சத்தத்தை உரத்து ஒலிபரப்புவது, முகபாவங்களை குளோஸ்அப்பில் காட்டுவது, பாத்திரங்களின் நடைபவனியின் பின்னால் கமறா செல்வது போன்றவற்றைச் செய்தது. நாடக சினிமா வளர்ந்தது. இன்றும் இந்தச் சாயலில் படமெடுப்பார் நமது விசு.*

*தமிழ்சினிமாவின் உயிர்நாடியே வசனமும், வசனஉச்சரிப்பும் உணர்ச்சிகளை மிகைப்படுத்திக் காட்டுவதும் தான் என்றிருந்த நிலைமை அக்காலம். அந்தக் காலத்தின் மதிப்பீடுகளைத் திறமையாகப் பூர்த்தி செய்தார் சிவாஜி கணேசன், கனல் பறக்கும் வசனங்களைக் கலைஞர் கருணாநிதி தந்தார். அனல் தெறிக்கும் விதத்தில் சிவாஜி உச்சரித்தார். புனல் நிறைந்தது நம் கண்களில் உணர்ச்சிப்*

பெருக்கினால்.

பராசக்தி, திரும்பிப்பார், தூக்குத்தூக்கி என்று நடிப்பில் வசன கவிதையாக மிளிர்ந்த சிவாஜியை சமூகப்படங்களில் புதிய பரிமாணம் ஏற்படுத்திக் கொடுத்தனர். பீம்சிங் "ப" வரிசையில் படிக்காத மேதை, பாவமன்னிப்பு, பதிபக்தி, பாசமலர், பாலும்பழமும், பாகப்பிரிவினை, பார்த்தால் பசிதீரும் என்று இவை தொடர்ந்தன. வீரப்பாவின் ஆலயமணி, ஆண்டவன் கட்டளையும் இப்படியே. பீம்சிங் படங்கள் வந்து கொண்டிருக்கும்போதே கனதியான வரலாற்றுப் புராண பாத்திரங்களைக் கொடுத்து கனப்பரிமாணம் கொடுத்தார் பந்துலு. கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், கர்ணன் போன்றவை முத்திரை பதித்தன. தாமச, சாத்வீக, ரஜோ குணங்களைச் சித்தரிக்கும் 3 பாத்திரங்களை கொண்ட பலேபாண்டியா வில் சிவாஜி நடித்தார். அதுவும் பந்துலு படம் தான். ஆனால் ஒருபடி மேலே போய் ஏ.பி. நாகராஜன் எடுத்த நவராத்திரியில் அற்புதம், பயம், கருணை, கோபம், சாந்தம், அருவருப்பு, சிருங்காரம், வீரம், ஆனந்தம் ஆகிய நவரசம் ததும்பும் பாத்திரங்களிலும் சிவாஜி நடித்தார். அவர் நடிப்பின் உச்சத்தை இவ்வளவு தெளிவாக விளக்கியது நவராத்திரியில் தான்.

ஏ.பி. நாகராஜன் திருவிளையாடல், திருவருட்செல்வர், திருமால்பெருமை, ராஜராஜசோழன் மற்றும் தில்லானா மோகனாம்பாள், விளையாட்டுப்பிள்ளை மூலம் சிவாஜிக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தக் களம் அமைத்துக் கொடுத்தார்.

ஆனால் நாகராஜனின் நவராத்திரி சிவாஜியின் சிகரம் எனலாம். அதன் பின்னர் வந்த படங்களில் எல்லாம் தோன்றிய பாத்திரங்கள் ஏதோவொரு வகையில் இந்த ஒன்பது பாத்திரங்களையுமே நினைவுபடுத்தின. பிரஸ்டீஜ் பத்மநாதன், பட்டாக்கத்தி பைரவன் என்று மேற்பூச்சுகள் மாறினாலும் இந்த நவரச நடிப்புகளுள்தான் எல்லாம் என்ற எண்ணம் தலைதூக்கலாயிற்று.

சிவாஜியின் அனுபவம், ஆற்றல், ஆளுமைக்கேற்ப புதிய வித்தியாசமான பாத்திரங்களைத் தகுந்த கதையமைப்புடன் உருவாக்க முடியாமல் திண்டாடியது திரையுலகம். திருலோகசந்தர், ஸ்ரீதர், மாதவன், ராஜேந்திரன், கோபால கிருஷ்ணன், மல்லியம் ராஜகோபால் போன்ற திறமைசாலிகளான இயக்குநர்களால் சிவாஜியைச் சரிவர நெறிஆள்கை செய்ய முடியவில்லை. விளைவு எந்தப் பாத்திரத்தை எடுத்தாலும் அங்கு சிவாஜி தான் தெரிந்தார். பரதாழ்வாராகக் கண்டேன் என்று ராஜாஜியும், என் தந்தையைக் கண்டேன் என்று வ.உ.சி.யின் மகனும் பாராட்டிய காலம் போய் சிவாஜியே வித்தியாசமின்றி விசுவரூபமெடுத்து நின்றார். அலுப்புத் தட்டியது. சலிப்பு மூண்டது. புதிய பரம்பரையும் இளமை, இனிமை, புதுமை என்று வேறிடங்களை நாடியது.

சிவாஜி அடக்கி நடித்த படப்பாத்திரங்களைப் பார்த்தால் கமலஹாசனின்சாயல் தெரியும். உத்தமபுத்திரன் பாத்திரத்தில் "யாரடி நீ மோகினி" யைப் பார்த்தால் ரஜனி காந்தின் இன்றைய மனரிசம் புரியும்.

ஒருமுறை "தங்கப்பதக்கம்" "சவுத்ரி" காட்சிகள் சிலவற்றை மிகைப்படுத்தாமல் "சோ" விற்கு நடித்துக் காட்டினார் சிவாஜி. பிரமித்துப் போன சோ ஏன் இப்படி நீங்கள் யதார்த்தமாக நடிப்பதில்லை என்று கேட்டபோது "நான் வசனம் பேசி ஓவர் அக்ற் செய்யாவிட்டால் படத்தை எவனாவது பார்ப்பானா?" என்று கேட்டாராம். தமிழ்சினிமாவின் வணிகத் தேவைகளுக்குத் தன்னை முற்றாகப் பலியாக்கிக் கொண்டமையே சிவாஜியின் துரதிர்ஷ்டமான பலவீனம். வணிகத் தேவைகளுடன் வரையறுக்கப்பட்ட சமரசம் செய்துகொண்டு ஆரோக்கியமான தேடலையும் நாடிக் கொண்டிருந்ததே கமலஹாசனின் சிறப்பான பலம்.

சிவாஜியின் கடைசி ஆசை ஈ.வே.ரா. பெரியாராக நடிப்பதே. யாராவது

*இதை நிறைவேற்றினால் கூட கப்பலோட்டிய தமிழன் பிற்பகுதி வ.உ.சி, திருவருட்செல்வர், அப்பர், ரிக்ஸாக்காரன், பாபு, போன்ற பாத்திரங்களின் சாயல் மீண்டும் தென்படாதிருக்க வேண்டியதே முக்கியம்.*

## *தினக்குரல் நாளிதழ்*

*கடந்த சித்திரை மாதத்திலிருந்து கொழும்பில் நாளிதழாக ஒரு புதுக்குரல் ஒலிக்கிறது. அதுதான் "தினக்குரல்" நாளிதழ். பிரபல ஈழத் தமிழ் வர்த்தகரும் தொழில் அதிபருமான எஸ்.பி. சாமியின் பெருமுதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டதே "தினக்குரல்". விசேட ஏற்பாட்டுக்கிணங்க கனடாவில் ஞாயிறு தினக்குரல் ஒரு டொலருக்கு மாத்திரம் விற்பனை செய்யப்படுகிறது. எழுத்தாழ நண்பன் ப. ஸ்ரீஸ்காந்தன் ஒவ்வொரு வாரமும் "ஞாயிறுத் தினக்குரல்" பத்திரிகையில் கனடிய செய்திகளைத் தொகுத்து எழுதிவருகிறார். இலங்கையிலிருந்து வரும் எந்தவொரு பத்திரிகையும் செய்யாத நன்முயற்சி இது.*

*"வீரகேசரி" பத்திரிகை நிறுவனத்திலிருந்து ஆசிரியபீடம் முதல் கணனித்துறைப்பிரிவு வரையிலுள்ள ஊழியர்களில் 31 பேர் ஒரேயடியாக விலகி தினக்குரல் பத்திரிகையில் இணைந்துள்ளனர். இவர்களது செயற்பாட்டுக்கான உந்துதல்கள் இரண்டு. முன்னர் பெற்ற சம்பளத்தை விட இரட்டிப்பு மடங்கு தினக்குரலில் கிடைக்கிறது என்பது ஒன்று. இலங்கைத் தமிழர்கள் அபிலாஷைகளைக் கூடியமுறையில் விரிவாக வெளிப்படுத்தலாம் என்பது இரண்டாவது. ஊழியர்கள் பெரிய அளவில் தினக்குரல் பத்திரிகைக்குச் சென்ற பின் எஞ்சியவர்களைத் திருப்திப்படுத்த 20% சம்பள உயர்வு வீரகேசரியிற் கிடைத்துள்ளது.*

*இலங்கைத் தமிழர்களுக்கென்று தேசிய அளவில் ஒரு வெகுதொடர்புச் சாதனம் இருக்கக்கூடாது என்ற காரணத்துக்கமையவே ஜே. ஆர். ஜயர்வத்தன, எஸ்மன்ட் விக்கிரமசிங்க போன்றோர் தமது 'வீரகேசரி' பங்குகளை இந்தியத் தமிழ் தொழிலதிபர் ஞானத்திற்கு கையளித்தனர். முன்னாள் செனட்டர் 'சண்டிலிப்பாய்' நடேசனின் வெற்றுக் காசோலையை உதாசீனம் செய்தனர்.*

*எம்மவர்க்கோர் ஏடென்ற உன்னத குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 'தினக்குரல்' இன்னும் வரவேற்புப் பெறவில்லை. காரணம் அது 'வீரகேசரி' யின் பிரதிமையாகவே வெளிவருவதுதான். உருவமைப்பு, உள்ளடக்கம், கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தக்கூடிய துணிவின்மை எல்லாவற்றிலும் வீரகேசரி போலவே தான் "தினக்குரல்" செல்கிறது. தனக்கென்று ஒரு தனித்துவப் பாதையை மேற்கொள்ளாமல், துணிவான கருத்து வெளியீடு செய்யாமல் தினக்குரல் வெற்றி பெறாது. இன்னொரு வீரகேசரி தேவையில்லை. இருப்பதே போதும் என்று வாசகர்களும் கருதிவிடக்கூடும். நிலமை இப்படியிருக்க "தினக்குரல்" அரசாங்கப்பணத்தில் நடக்கிறது என்ற ஞானசூனியப் பிரசாரத்தை சிலர் இங்கே செய்கிறார்கள். அறியாமை என்றும் சிரஞ்சீவித் தனம் வாய்ந்தது தான்.*

அடோனிஸ்ஸின் பாலஸ்தீனக் கவிதைகளைத்
தந்துதவிய காலச்சுவட்டிற்கு எம் நன்றி.

# புதிய வெற்றிடம்

அமிர்தகன்

சோகத்தின் ஓலத்தில்
கசியும்
தொலைந்து போன உறவுகள்
வெருட்சிப் பார்வையுடன்
தூரத்து முகங்கள்.
பிரிவுகளின் எல்லைகளை
தொலைதூரம் வளர்த்து
தெரியாத தெருவுக்கு
துரத்தப்பட்ட நிலையில்

பாசங்களின் பிணைப்பு
என்றோ ஒரு நாள் வரும்
தபால்காரனின் தரிசனத்தில்.
அர்த்தங்கள் உறங்கிய
உணர்வோடு
ஜனனங்கள்.
அர்த்த ராத்திரியின்
அவல ஓசைகளில்
புதையுண்ட மனிதங்கள்
கூடிக் குலாவிய
எங்கள் சொந்த மண்
நிசப்தக் கணங்களில்
சுடுகாடாய்




# ஒரு பலி

சக்கரவர்த்தி

சடசடத்த ஒலியுடன் கிளைகள் ஒடிந்து விழும். ஐந்நூறு ஆண்டுகால போதிமரம் உடைந்து சிதறும். பசும் கிளிகளும் குயில்களும் மைனாக்களும் இன்னபிற பட்சி சாதிகளும் உடல் கருகியும் பொசுங்கியும் இறக்கைகள் சிதறியும் செத்துச் சிதறும்.

வெள்ளைவெளேரென அழகாய் அமைதியாய் இருக்கும் இந்த ''போஹா' - சிதறிய

*கற்குவியலாய் சின்னாபின்னமாய் உதிர்ந்து குவியும்.*
*தேரோக்களையும் பிக்குகளையும் இடிபாட்டுக்குள் இருந்து கை, கால், தலை, இதயம் என்று தனித்தனியாய் மீட்டெடுக்க மூன்று நாட்கள் வரை செல்லலாம்.*

*அதிஸ்டலாப சீட்டுக்காரன் - றம்புட்டான் காரன்*
*பிக்பாக்கட்காரன் - நடைபாதை வியாபாரி*
*பிச்சைக்காரன் - பயணி*
*இன்னபிறமக்கள்*

*4:15*
*பஸ் நிலையம் நிரம்பி - நெருசலில் பிதுங்கும். குறைந்தது மூவாயிரம் நான்காயிரம் பேராவது கூடியிருக்கும் நேரம்! திட்டம் இட்டபடி - கட்டளைப்படி நாளை இதே நேரம்.....*

*இந்த வழமை நாளை ஏது? எங்கெங்கோ மூலைக்கிராமத்தில் - மூலை வீட்டில் எல்லாம் மார்பில் அடித்து அடித்து ஒப்பாரி வைப்பார்கள்.*

*அப்பனை இழந்த குழந்தை - கணவனை இழந்த மனைவி*
*தலைவனை இழந்த குடும்பம்*
*அழுகை ஓசை திசை தோறும் தெறிக்கும்*

*இவ்விடம் இரத்தச் சதுப்பு நிலமாய் கணப்பொழுதில் மாறிடும். முழு உடலாய் யாருமே இறக்க மாட்டார்கள். கையும் காலும் தலையும் ஈரலும் இதயமும் தனித்தனியாய் கிடக்க சிதைந்து சாவார்கள்.*

*சிதறி - சிறுகோடாய் ஓடி - ஓடையாய் மாறி சாக்கடையில் கலக்கும் மனிஷ இரத்தம். தெரு நாய் மனிஷ இரத்தம் நக்கி சுவைத்துப் பார்க்கும்.*

*பேயும் நரியும் இடுகாட்டுக்குள்ளும் சுடுகாட்டுக்குள்ளும் "கூய்...." போட்டுக் கொள்ளும்.*

*இறந்தவன் இறந்துபோக - அரையும் குறையுமாய் இழுத்துக்கோ பறிச்சுக்கோ என கிடப்பவனும் - கையையோ கண்ணையோ அல்லது இதயத்தையோ ஈரலையோ இழந்தவனும் குடல் மட்டும் வயிறு பிளந்து வெளித்தள்ள - உயிருடன் உள்ளவனும்........*

*ஓலம் இவ்விடத்தே ஈனசுரமாய் கசிந்து கசிந்து....எதிர் ஒலிக்கும்.*

*ஊழித் தீ போன்றதொரு பிரளயம்*
*எழுநூற்றி ஐம்பது பேர் முதற்கொண்டு ஆயிரம் பேர்வரைக்கும் கொல்லப்பட வேண்டும். கும்பல் கும்பலாய் உயிர் பறிக்கப்பட வேண்டும். பலவந்தமாய் இயற்கைக்கு புறம்பாய் மனித தர்மங்களுக்கு விரோதமாய் உயிர்த் திருட்டு செய்ய வேண்டும்.*

*இது கொடுமையல்லவா? மகாபாவம் அல்லவா? எத்தனை கோடி ஜென்மங்கள் எடுத்து பாவத்தை தொலைப்பது. இக்கொடும்பாவ கட்டளைக்கு எப்படி நான்*

*உடன்பட்டேன்? கடவுளே....... பகவானே......எனைக்காப்பாய். இப்பாவக் கட்டளைக்கு என்னை உட்படுத்தாது எனைத் தடுத்தாட்கொள்ளாயோ..... தெய்வமே தெய்வமே........ எனைத் தடுத்தாட் கொள்ளாயோ..... தடுத்தா..........*

***அர்ஜூனா!***

**போர் புரிதலும் நாட்டை காப்பம் மீட்பதும் சத்திரியன் கடமை. நீ உன் கடமையை செய்யாது ஒதுங்கும் பட்சத்தில் பழியுன்னை வந்தடையும். யுத்தம் இடல் உன் கடமை. பலனைப் பற்றி கவலை கொள்ளாதே. பலன் என்னும் அழிவுக்கு நானே பொறுப்பானவன்.**

*'கிணீர்..' ரென ஒலியை உண்டாக்கிக் கொண்டு-நெளிந்த அலுமினிய பாத்திரத்தில் ரூபாய் நாணயம் உருண்டோடியது. சிந்தனை மெல்லக் கலைய - எதிர்க்க அவள் தெளிந்தாள். எனைப் பார்த்து புன்னகைத்துவிட்டு நகர்ந்தாள்.*

*எல்லாநாளும் இதே நேரம் போறாவுக்கு வரும் சிறுமி. புத்தரை கும்பிட வரும் இச்சிறுமிக்கு என் வேசம் புரியாது எத்தனை இரக்கம்தான் என் மீது.*

*"பிறவி ஊமையான இவனுக்கு*
*எத்தொழில் செய்து பிழைப்பதற்கும்*
*முடியாத காரணத்தால் - இவனுக்கு*
*தான தருமங்கள் பண்ணுங்கள்"*

*கெந்தலபிட்டிய விதானையானின் கைஒப்பத்துடன் என் கழுத்தில் தொங்கும் பிச்சைக்கார அட்டையைப் பார்த்து - என் வேசம் தெரியாது முதன் முதலாய் தானம் பண்ணிய சிறுமி. நாள்தோறும் பொய்யனுக்கு ஈகையிடும் சிறுமியைக் கூட கொன்றுவிடுவேன். நாளை இதேநேரம் இந்த இடத்தில்தான் எங்கேனும் நிற்பாள்.*

*இவள் எனக்கோ என் இனத்துக்கோ என்ன துரோகம் பண்ணியிருக்கக்கூடும்? வேற்றினம் என்கின்ற ஒன்றைத் தவிர இவளது பாவம்தான் என்ன? பருவ வயதைக் கூட எட்டாத இந்தச் சிறுமியும் கொல்லப்பட வேண்டிய தேவையோ அதில் உள்ள நியாய தர்மங்கள்தான் என்ன? இவளைக்குறி வைத்து தாக்கவில்லை. தாக்கப்படும் இடத்தில் இவளும் இருக்கப் போகிறாள். ஆதலால் இவளும் சிதைந்து சாவது என்பது தவிர்க்க முடியாதது.*

*"மஹே ....அம்மே...." அவள்தான் சத்தமிட்டு குப்புறவிழுந்தாள். அதிர்ந்து பார்த்தேன்.. இடைவெளிவிட்டு ஒருத்தன் வேகமாய் ஓடி மறைந்தான்.*
*சங்கிலித் திருடன்*

*பாத்திரத்தினுள் கிடந்த காசை பொறுக்கி பையுள் போட்டுக் கொண்டே சிறுமியை வேகமாய் நெருங்கினேன். செயின் இறுக்கி அறுபட்டதில் கழுத்தோரமாய் இரத்தம் கசிந்தது. முழங்கால் முழங்கையிலும்கூட சிராய்ப்பும் இரத்தமும். கீழே கிடந்தவளை நிமிர்த்தி தடவி தூசிதட்டிவிட லேசாய் கிறுகிறுப்பு வந்தது. இரத்தம் பார்க்க பயம் வந்தது. படபடப்புடன் கூடிய மயக்கம் வந்தது. மண்டையின் உட்புறமாய் வியர்த்தது. அவ்விடத்தே நான் மெல்ல அமர்ந்தேன்.*

*என்னால் எப்படி முடியப்போகிறது? இல்லை. என்னால் முடியவே முடியாது.....*

அர்ஜுனா!

***இரத்தம் பார்த்து மயங்காத மனமும்-சாவு பார்த்து கலங்காத கண்களும் கொலைகளுக்கஞ்சாத நெஞ்சமும் உடையோனே எழுந்திரு.....சத்திரிய இலக்கணத்தை இழிவுநிலைக்கு உள்ளாக்காது - எழுத்து போர் செய்!***

*தலையை நிமிர்த்தி கண்ணை கசக்கிவிட்டு பார்த்தேன்...*
*சன நெரிசலுக்கும் - வாகன விரைதலுக்கும் அப்பால் - ஓரமாய் குமார் நின்று கொண்டு இருந்தான். அலுமினிய பாத்திரத்தை கமக்கட்டுக்குள் இறுக்கிக் கொண்டு நெருங்கிப் போனேன். நான் வருவது கண்டு முன்னோக்கி நடக்கத் தொடங்கினான்.*

*குமார் சாமர்த்தியசாலி. அசாத்திய ஒற்றன். பத்துவருடங்களுக்கு மேலாய் யாராலும் இன்னார்ரென அடையாளம் காணப்படாது சூழலுடன் ஒன்றிப் போன-போகும் சாணக்கியன்.*

*முதலில் அவனை பார்த்த அன்றே விபரீதமாய் இருந்தான். கோட்டையில் ரெயின் நின்றதும் - கரியமிலக்காற்று முகத்தில் லேசாய் அப்பிற்று. கசகசத்த முகத்தை துடைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தேன். விறைப்பாய் மெலிந்த தேகத்துடன் எதிர்க்க ஒருத்தன் நிற்பது கண்டு -சி.ஐ.டி. யோவென நினைத்து திகைக்க- "சைனைட்" நினைப்பு மனசுக்கு போனது.*
*"அர்ச்ஜுன்" என்றான்.*
*மனசு லேசாகி சொல்லப்பட்ட குமார் இவன் என புரிந்து சிரித்தேன். அவன் சிரிக்க மறுத்தான். மறுபடி சைனைட் எண்ணம் மூளைக்கு போனது.*

*'நான் குமார்' எனக்கு முதுகாட்டி சொல்லிக் கொண்டே நடக்கத் தொடங்கினான். நம்பிக்கை வந்தது. அவனை பின் தொடர்ந்து இடைவெளிவிட்டு நானும் நடந்தேன். அவனைப் பின் தொடர்வது என்கடமை. கேள்விகள் எதுவும் இன்றி அவன் பின் இரண்டு மணிநேரம் தொடர்ந்தேன்.*
*மூளை இடங்களை பதிவு செய்ய தொடங்கியது.*
*போஹுா சந்தி*
*விகாரை....... பஸ் நிலையம்*
*இண்டிகா போஸ்டாபிஸ் - பீப்பிள்ஸ் பார்க்*
*ஐந்துலாமடச் சந்தி....*
*ஆறுமுறை இவ்விடத்தே சுற்றி முடிய- நெருங்கி வந்து விலாசம் கொடுத்தான்.*
*"நாலு பெடியள் சுவிஸ் போக நிக்கிறாங்கள். பாத்து...."*
*கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு தொலைந்து போனான்.*

*முன்னோக்கிப் போகும் குமாரை பின் தொடர்ந்தேன்....*
*போஹுா சந்தியில் இருந்து ஐந்துலாம்பு சந்திவரை முன்னோக்கி நகர்ந்தவன் ஆட்டுப்பட்டித் தெருவுக்குள் புகுந்து மூத்திர முக்கில் ஒதுங்கி நின்றான். என் கழுத்தில் கிடந்த பிச்சைக்கார அடையாள மட்டையை கழட்டி அவனிடம் கொடுத்தேன். தோள்பையுள் புகுத்திக் கொண்டான் குமார்.*
*"நேற்று இரவு மண்டி வந்திது.... நாளைக்கு கட்டாயம் முடிச்சிட வேணும்."*
*நடந்து கொண்டே சொன்னான் ....நான் சுரத்தில்லாமல் பின நடந்தேன்.*

*"எந்த பிரச்சினையும் இல்லத்தான"*

*"இல்ல"*
*"லொறி எடுக்கிறதில"*
*"இல்ல...முதல்லயே சொல்லிற்றன். பிரச்சின இல்ல. லொறி கிடைக்கும்."*
*குமார் முன்னேயும் நான் பின்னேயும் தொடந்து நடந்தோம்.*

*சிலாபத்தில இருந்து "காருண்"ன "கெந்தல"யில கொண்டு வந்து வைச்சிருக்கன். களனி பாலத்தால கொண்டுவர ஏலாது. பாலத்தில ரெண்டு பக்கமும் செக்கிங். மட்டக்குளி காக்காத் தீவில கொண்டு வந்து வைக்க வேணும். அதால முகத்துவார பக்கம் தோணியில வைச்சித்தான் கொண்டுவர வேணும்.*

*நாளைக்கு பதினொரு மணிக்கு முகத்துவாரம் மாரியம்மன் கோவிலடியல நிக்கிறன். அந்த இடத்துக்கு லொறியோட வந்தாச்சரி....*
*மூத்திர முக்கால் திரும்பி- செக்கடித் தெரு போய் மைலன் தியேட்டர் மூலையில் இருக்கும் தேனீர் கடைக்குள் போய் "பை"யை கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விட்டு தொலைந்து போனான் குமார். கொச்சிக்கடை சத்திரம் தாண்டி இருக்கும் வாளிக்கிணற்றில் குளிக்க நடந்தேன்.*

*"என்ன அண்ண, எப்ப பிளைட்டாம்?"*
*நாள் தோறும் அறைக்குப் போனதும் இதே கேள்வி.*
*யாராச்சும் ஒருத்தர் கேட்பார்கள். இன்று வசந்தன் கேட்டான்.*
*"நாளைக்கு" பொய் சொன்னேன்.*
*"நாளைக்கா?" வசந்தனுக்கு அதிர்ச்சியா சந்தோசமா தெரியவில்லை.*
*"ம்... சிங்கப்பூருக்கு"*
*"அண்ண குமார நம்பாதீங்கோ.... நாங்க எல்லாரும் சிங்கப்பூர் மலேசியா எண்டு ஆறுமாதம் அலைஞ்சு போட்டு வந்தனாங்கள்"*
*"பாப்பம் இந்தா சாப்பாடு. செக்கடித்தெருவில எடுத்த நான். எங்க மத்தவங்கள்?"*

*"எதுக்கண்ண நீங்க வாங்கி வந்தனியள். அவங்கள் லிபர்டி பிளாசாவுக்கு கீதா குமாரசிங்காவோட சலூனுக்குபோட்டாங்கள்.*
*"எதுக்கு அங்க?"*
*"வேற எதுக்கு சரக்கடிக்கத்தான்! சுதனோட அக்கா சுவிஸ்ல இருந்து காசு அனுப்பினவ. அத எடுத்துக் கொண்டு போட்டாங்கள்"*
*"நீ ஏன் போகையில்ல....."*
*"போக விருப்பம்தான். என்னவோ உறுத்தலா இருந்திச்சி.*
*ஏலா எண்டு சொல்லிப் போட்டு படுத்திட்டன்"*
*தெளிவாய் இருந்தான் வசந்தன்.*

*சோற்றுப் பார்சல்களை அறை மூலையில் வைத்துவிட்டு- ஆடைகளைக் கூட மாற்றாது. மல்லாக்கப்படுத்து முகட்டை வெறித்தேன். மனசு இருட்டிற்று.*

*பாவம் இந்த பையன்கள். வசந்தன், ரவி, இளங்கோ, சுதன், எத்தனையோ கனவுகளையும் லட்சியங்களையும் சுமந்து திரிவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பி வந்ததே பெரும்பாடு.. அடைக்கலம் தரும் ஏதேனும் ஓர் நாட்டுக்கு போய்ச் சேருவது அதைவிடப் பெரும்பாடு. இவையெல்லாவற்றையும் விட நாளை இவர்கள் எதிர் நோக்கப் போகும் பிரச்சினைகள் சொல்லி மாளாதவைகளாக இருக்கும்.*

நான் தவறவிட்ட தடயங்களை வைத்து - நான் யார் - எந்த இடத்தை சேர்ந்தவன் எங்கே தங்கியிருந்தேன் என்பனவற்றை எப்படியும் கண்டுபிடித்து விடுவார்கள்.

எதுவுமே அறியாது விழிவிழியென விழிக்கும் இவர்கள் நாலாம் மாடியில் இரத்தப் பூச்சு அறையில் இரத்தம் சொட்ட சொட்ட "கனடா போகவந்தவன் இப்ப சிங்கப்பூர் போட்டான்" என்பதை தவிர வேறு என்ன சொல்ல முடியும் இவர்களால் என்னைப்பற்றி.

நேற்று ராசன் கேட்டான் ஏன் அண்ண........ உங்க குடும்பத்திலதான் ஒருத்தரும் இல்ல எண்டு சொல்லுறியள்
பேசாம இயக்கத்தில சேந்திருக்கலாம்தான....
"எதுக்கண்ண வெளிநாடெல்லாம் போய்..... நீங்கள்- யாருக்கு உழைச்சிக் குடுக்கப் போறியள்? அவங்களுக்குத்தான் அக்கா, தங்கச்சி எண்டு ஏகப்பட்ட பிரச்சினைகள். உங்களுக்கு அப்பிடியே..."

சிரித்துவிட்டு - அவனது சாறனுக்கு சோப்புப் போட்டேன். ஓடிவந்து பறித்தெடுத்தான்.

"வேண்டாம் அண்ண.....உங்கட உடுப்ப மட்டும் தோய்ங்க. டீ போட்டுத்தர்றியல் சரி....இந்த வேலயளும் செய்ய வேணுமே... நேற்று இளங்கோ குடிச்சிப் போட்டு சத்தி எடுக்க நீங்க தானமே அள்ளினது எண்டு சொன்னார்கள். ஏன் அண்ண இப்படியியெல்லாம் செய்யறியள்?"
புன்னகைத்தேன்! என்னால் என்னென்னவோ கொடுமையெல்லாம் அனுபவிக்கப் போகும் இவர்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும் இவைகளைத் தவிர. உறுத்தும் என் மனது எப்படிபுரியும் இவர்களுக்கு.
"இல்ல எண்ட தம்பிமார் மாதிரி இரிக்கியள். அதுதான்"
"உங்களுக்கு எத்தின தம்பி? ரெண்டல்லே..."
"ம்....ரெண்டு தம்பியும், ஒரு அண்ணனும் ஒரு அக்காவும்"
"எல்லாரையும் தான் கொண்டவங்கள்?"
ராசன் கேட்க நான் இறுகிப் போனேன்.
அந்த நாள்!
அந்த நாளுக்கு அப்புறம்தான் நான் இறுகிப் போனேன். பள்ளிவிட்டு தோணியில் ஏறி ஆற்றைக் கடந்து ஓடி என் ஊருக்கு போனபோது - கொக்கட்டிச் சோலை இரத்தம் கொட்டிய சோலையாகியல்லவா கிடந்தது.

வெள்ளைக்காரன் கூட இடிக்காது திரும்பிப் போன தான்தோன்றி ஈஸ்வரர் கோவில் தடயம் கூட இல்லாது தரைமட்டமாகிக் கிடந்தது. நான் தவழ்ந்து ஆடி, பாடி வளர்ந்த தெருக்கள்... அம்மா, அப்பா கூடப் பிறந்தவர்கள். மாமன், மச்சான், சித்தப்பா உட்பட முப்பத்தி ஏழுபேர்கள் என் ஊரவர்கள். அயலவர்கள் எண்ணூற்றி பதின்மூன்று பேர். ஆயிரத்தி இருநூறுபேர் மட்டுமே வாழுகின்ற கொக்கட்டிச் சோலையில எண்ணூற்றி ஐம்பது பேரை வெட்டியும் சுட்டும் - எப்படியோ கொன்று குவித்துவிட்டார்கள். அடையாளம் தெரியாது ஊர் சிவந்து கிடந்தது. அன்றுதான் நான் இறுகிப்போனேன். அதற்கு அப்புறம்தான் மரத்தது மனது.
பாளம்பாளமாய் பிளந்த நிலத்தில் இன்று லேசாய் தூறல் விழ லேசாய் சிலிர்த்தது மனசு.

அமோனிய வாடை குப்பென்று அடித்தது.

கபூர்காக்காவுக்கு என்னை பார்த்த உடனேயே கண்கலங்க தொடங்கிற்று. என் தலை தடவி, தோளோடு அணைத்துக் கொண்டார்.

"இசுமயிலு டெலிபோன் செஞ்சாந்தம்பி காத்தான் குடியில இருந்து ...நீங்க கொழும்புக்கு வாறயளாம் எண்டும் ஒங்களுக்கு ஐநூறு மூட்ட யூரியாவும் லொறியும் வேணும் எண்டு... ஆயத்தமா வெச்சிருக்கன் தம்பி.."

சொல்லிக் கொண்டே காக்கா லொறித் திறப்பை நீட்டினார். வாங்கிக் கொண்டேன்.
"றைவர் இல்லாம எப்பிடித் தம்பி ஊருக்கு கொண்டு போகப் போறயள்...வேணும் எண்டா நம்மட றைவர கூட்டித்து போங்க தம்பி"
கபூர் காக்கா ரொம்பவும் அக்கறையுடன் கேட்க - நான் மறுத்தேன்.
"இல்ல காக்கா நான் கொண்டு போவன். காசு எவ்வளவு எண்டு சொன்னா...?"

காக்கா என்கை பிடித்து கண்கலங்கினார்.
"இந்த வாழக்க போடியார் போட்ட பிச்ச தம்பி. ஒங்க வாப்பா இல்லாட்டி நான் இப்பயும் முட்டாசிதான் தம்பி யாவாரம் செஞ்சித்து இரிந்திரிப்பன். ரெண்டு பொஞ்சாதி பதினொரு புள்ள ஒங்க வாப்பாட்ட ஒருநாள் செல்லிக் கொளறுனன் தம்பி. அறுநூறு மூட்ட நெல்ல நம்பிக் குடுத்தாரு. எனக்கு விசுவாசம் இரிக்கி தம்பி. என்ன கயித்த காலமோ... கறாமுல பொறந்ததுகள் குடும்பத்தோட அழிச்சிப் போட்டானுகள். நீங்க கொண்டு போங்க தம்பி. வெள்ளாம வெளஞ்ச ஒடன யூரியாவுக்கு பதிலா நெல்லா குடுங்க தம்பி. லொறிய காத்தான்குடியில ஊட்ட கொண்டு உட்டயல் எண்டா போதும்."

கபூர் காக்காவை நினைவு தெரிந்த காலம் தொட்டே எனக்கு தெரியும். காத்தான்குடியில் இருந்து கலர்கலராய் மிட்டாய் கொண்டு வந்து வியாபாரம் செய்தவர். அப்பாவின் உதவியால் நெல் வியாபாரியாகி கொழும்பில் கடை, ஐந்து லொறி காத்தான்குடியில் சொத்து என்று ஏகப்பட்டவைகள்.

அப்பா சாகின்றவரை - ஊரில் பிரச்சினை ஆரம்பிக்கும்வரை-வீட்டுக்கு அடிக்கடி வந்து தனது நன்றியை தெரிவித்து செல்பவர். அப்பாவால் வாழ்வு பெற்றவர் இன்று என்னால் அழிந்து உருக்குலைந்து போகப் போகின்றார்.
அப்பாவுக்கும் எனக்கும் இடையில் எத்தனை வேறுபாடு.

நன்றி விசுவாசத்திற்காய் ஐநூறு சாக்கு யூரியாவும் லொறியையும் தந்தனுப்பும் மனிதனுக்கு நான் செலுத்தப்போகும் பிரதிஉபகாரம்தான் என்ன?
சித்திரவதை -
சொத்து பறிமுதல்
சிறை அல்லது மரணம்

சிதைந்து சிதறிக்கிடக்கும் லொறியின் இலக்கத்தை வைத்து இது இன்னாருடையது என்பதை ஆறு மணிக்கு முன்பாய் பிடித்து விடுவார்கள். அப்புறம் என்ன? முதலில் இரத்த மூட்டையாக்குவார்கள். பின்னர்தான் கேள்வி கேட்பார்கள். விழிவிழியென விழிக்கும் கபூர்காக்கா என்ன சொல்வார்?

உனக்கும் இத்தனைபேரின் கொடிய சாவுக்கும் என்ன சம்பந்தம் என்றால் என்ன

*சொல்வார். என்மேல் சாபம் இடுவதைத் தவிர அவரால் என்ன சொல்ல முடியும்.?*

*பாவம் கபூர்காக்கா. மிட்டாய் வியாபாரியாகவே அவர் இருந்திருக்கலாம். இப்போதுகூட இது எதுவுமே நடக்காமல் தடுக்கலாம் குமார் மட்டுமே இடையில் இருப்பவன். குமாரைக் கொன்றுவிட்டால்....? கொன்றுவிட்டு நாள்தோறும் போடும் பிச்சைக்கார வேசத்தையே வழமையாக்கி விட்டால்?*

*குமார் இறுகிய முகத்துடன் நின்றான். முகத்துவாரம் மாரியம்மன் கோவில் முன் நின்றான். அவன் முகம் எப்போதுமே அப்படித்தான் வேற்றுக்கிரகவாசியின் இயல்புடையோன் போல் அவன் செயற்பாடுகள். சிரித்தல் உணர்ச்சி என்பதே இல்லாது இருப்பவன். எத்தனை கொடுமைகளை அனுபவித்தானோ.*

*லொறியை அவன் அருகே நிறுத்த ஏறிக் கொண்டு சைகை காட்டினான். அதன்படி ஓட்டினேன்.*

*"ஏன் லேட் நான் பயந்திட்டன். இரவும் போன் வந்தது. கட்டாயம் இண்டைக்கு முடிச்சிடச் சொல்லி"*
*"காக்கா நல்லா தெரிந்தவரு குடும்பக்கதை கதைக்கத் தொடங்கித்தாரு. சரி....'காருண்' எங்க?"*
*"மட்டாக்குளி போறவழியில சந்தியில திரும்பி நேரா"*
*ஓட்டினேன்.*
*"இனித்தான் கேன்ல வைக்க வேணுமா? இல்லாட்டி வச்சே இருக்கா?"*

*"இல்ல இரவே நான் இறுக்கிட்டன். மொத்தம் பதின்மூணு கிலோவுக்கு மேல..... கண்போடம் மட்டும் எட்டுக் கிலோ. ஜல்டின் ஐஞ்சுகிலோதான். டாலுவினும் கொஞ்சம் லேசா மிக்ஸ் பண்ணியிருக்கன் ஒண்டுக்கு ஆறா டிக்னேட்டர் வச்சிருக்கன்". பேசுவதை நிறுத்திவிட்டு மெதுவாக ஓட்டும்படி குமார் சைகை காட்டினான்.*

*பிரதீபா மண்டபம் தாண்டி சேர்ந்தாண்டி, தெருவோரமாய் மீன் விற்பவர்களை தாண்டி ஓரமாய் லொறியை நிறுத்தினேன். அவன் சைகைப்படி அவன் மட்டும் லொறியை விட்டு இறங்கிக் கொண்டே என்னை இறங்க வேண்டாம் என்றுவிட்டு மீன் வியாபாரிகளுடன் சிங்களத்தில் பேரம் பேசினான். ஐந்து நிமிட பேரத்தின்முடிவில் இரண்டு கூடை மீன் லொறியின் பின்புறம் யூரியா மூட்டையின் மேல் ஏற்றிவிட்டு பெருவிரலை உயர்த்திக் காட்டினான். அப்புறம் தொலைந்து போனான் பாவி.*
*ஆயிரம் பேரின் வாழ்க்கை இப்போது என்கையில். நான் நினைத்தால் போதும் - பாழ்வெளியில்*
*கடல் முற்றத்தில்*
*ஆற்றின் கரையில் - புல்கூட கருகாவண்ணம் என்னால் முடியும்.*

***அர்ஜுனா!***
***நீ உன் போர் கருவியை தழுவ விட்டாலும். இவர்களை நீ கொல்லாது போனாலும், வேறு ஏதேனும் வழியில் நான் இவர்களை கொன்றே தீர்வேன். இவர்கள் எல்லோரையும் நான் ஏற்கனவே கொன்றாகிவிட்டது. உடலை கீழே விழுத்த மட்டுமே நீ.போ.போய் அவர்கள் உடல்களை கீழே விழுத்து.***
*லொறியை ஸ்ராட் பண்ணி ஓட்டத் தொடங்கினேன்.*

# ப்ராமணத் தந்திரம்

ப்ரணவன்

முடிவெட்டிச் சீவித்த நாங்கள் எல்லாம்
முன்னேறி விட்டோமே கனடா வந்து
கொடிகட்டி துணிவெளுத்த நாங்கள் எல்லாம்
குனிந்துவளைந் துழைக்கின்றோம் இங்கே; ஆற்றில்
தடிநட்டு மீன்பிடித்த நாங்கள் எல்லாம்
தம்மியல்பு மாறிட்டோம் ஆனால் கோவில்
படி தொட்டு பூசைசெய்த ஐயா நீயேன்
பக்தர்களை வைத்துழைக்கப் பார்க்கின் றாயோ?

மென்னுடலும் சிறுகுடுமி நெற்றி மேட்டில்
மேல்விரலால் நீயிழுக்கும் குறியும் கண்டு
பின்னுமிரு கையுடனே உனக்குப் பின்னால்
பெரும்பக்தி உணர்வுடனே நிற்கும் ஏழை
தன்னுடனே நீநடத்தும் வியாபா ரத்தை
தான்நிறுத்த மாட்டாயோ ஐயா; பாவம்
என்னுடனே எத்தனைபேர் காசில் வாழ
எப்படித்தான் பிராமணனே பழகி னாயோ?

திருமணத்தில் சடங்குகளில் தேவை யின்றித்
திருக்குறளும் அறிவுரையும் நேரம் போக்க
ஒருமனதாய் தருங்காசு போதா தென்று
ஒரு சுழிப்பு முகத்தினிலே உனக்கு என்றால்
பெருமனது செந்தண்மை பூண்ட மாந்தர்
பிராமணர்கள் எனப்பகரும் குறளும் பொய்யா?
பிரமத்தை உணர்ந்தவனே பூசை செய்யும்
பிராமணனாம் எனும்வேதப் பொருளும் பொய்யா?

கண்கண்ட இடமெல்லாம் உங்கள் கோயில்
கடைதொங்கும் புத்தகத்தில் உங்கள் பேர்கள்
மண்கண்ட பத்திரிகை விரித்துப் பார்த்தால்
மணவறைகள் விளம்பரங்கள் ஆளுக் கொன்று
விண்கண்ட தெய்வமதன் பேரைச் சொல்லி
விளையாடும் நீங்களெலாம் வேலை தேடி
பண்பட்டு உழைத்துண்டு வாழ்ந்தால் என்ன?
பாபத்தை சேர்க்காமல் நடந்தால் என்ன?

# என் நண்பனின் வீடு எங்கே?

## ஞான ஆனந்தன்

*சமகாலத் திரைப்பட இயக்குநர்களில் சிறந்த ஒருவராக உலகில் கணிக்கப்படும் ஈரானிய இயக்குநர் அவ்வாஸ்கிய றொஸ்ரமியின் (Abbas Kiaros Tami) படைப்பே, 'என் நண்பனின் வீடு எங்கே?' என்ற 90 நிமிட வண்ணத் திரைப்படமாகும். இது ஈரான் நாட்டில் 1987இல் வெளியானது. பாசிமொழியில் ஆங்கில தலைப்புக்களுடன் அண்மையில் றொறன்ரோ திரையரங்கொன்றில் காண்பிக்கப்பட்டது.*

*கானும் (Kanum-Institute for The Interlectual Development of Children and Young Adults) தயாரிப்பில் தெகரானில் வெளியான இத்திரைப்படத்தை திரைக்கதை வசனம் எழுதி இயக்கியவர் கியரொஸ்ரமி. கமராஇயக்குநர் பாகட் சாபா (Farhad Saba) நடிகர், பாபக் அகமட் பூர் (Babak Ahmadpur), அகமட் அகமட்பூர் (Ahmad Ahmadpur), முகமட் றேசா நெமற்சடே (Mohammad Reza Nematzadeh) ஆகியோர் முக்கியமானவர்கள்.*

*கோக்கர் (Koker) கிராமத்தில் உள்ள பாடசாலையில் சிறுவன் நெமற்சடே வீட்டுப்பாடங்களை ஒரே அப்பியாசப் புத்தகத்தில் செய்வதை அடிக்கடி மறந்து விடுகிறான். ஆசிரியர் மிகவும் கடுமையானவர். இருமுறை அவனை மன்னித்த பின் அடுத்த தடவை நெமற்சடேயை பாடசாலையில் இருந்து வெளியேற்றி விடுவதாகக் கடிந்துரைத்துவிட்டார். அன்று மாலை நெமற்சடேயின் நண்பன் அகமட், நெமற்சடேயின் அப்பியாசக் கொப்பியை தனது பையில் தவறுதலாகத் தன்னுடன் கொண்டு வந்து விட்டதை வீட்டில் அவதானித்தான். மாலையாகிக் கொண்டிருந்தது. நண்பன் நெமற்சடே அடுத்த கிராமத்தில் வசிப்பவன். வீட்டுப்பாடம் இந்த அப்பியாசக் கொப்பியில் செய்யவில்லை என்றால் அடுத்த நாள் பாடசாலையில் இருந்து வெளியெற்றப்படுவான். ஆனால் தானும் வீட்டுப்பாடம் செய்ய வேண்டும். அம்மா சொல்லும் பல வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்ன செய்வது! தனது நண்பனை ஆசிரியரின் தண்டனையில் இருந்து காப்பாற்ற நெமற்சடேயின் கிராமததிற்கு ஓடுகிறான். ஆனால் அவன் வசிக்கும் வீடு தெரியாது. பல பிரச்சினைகள், தடங்கல்கள் மத்தியில் வீட்டைக் கண்டு பிடித்தும் கதவில் தட்ட துணிவின்றி மீண்டும் தன்வீட்டுக்குத் திரும்பி வந்து இரவெல்லாம் விழித்திருந்து தனது வீட்டுப்பாடத்தையும், தனது நண்பரின் வீட்டுப்பாடத்தையும் செய்து முடித்து மறுநாள் தனது நண்பனை ஆசிரியரின் தண்டனையில் இருந்து காப்பாற்றுகிறான்.*

*நடிகர் சிறுவர்களாயினும், அவர்கள் நடிப்பு அற்புதமானது. அகமட்டின் உணர்வுகள் தெளிவாக வெளிக்கொணரப்படுகின்றன. சிறுவரின் உணர்வுகளையும், அவர்களின் சிந்தனைகளையும் பெரியோர் பொருட்படுத்துவதில்லை என்பதையும், புரிந்து கொள்வதில்லை என்பதையும், பெரும்பாலும் தட்டிக்கழித்து விடுகின்றனர் என்பதையும், இயக்குநர் கியரொஸ்ரமி தெளிவாகக் காட்டுகிறார். சட்டமும், அமைச்சலும்தான் முக்கியம் - சொன்னதைச் செய் - என்ற வளர்ந்தவரின் கருத்தை எதிர்க்காமல், சிறுவரின் உலகில் பெரியோர் அவதானிக்காத பல அம்சங்கள் இருப்பதை இத்திரைப்படமூலம் காட்டுகிறார். பிள்ளைகளைப் பெற்றெடுப்பது மட்டும் போதாது. அவர்கள் வளர்ச்சிப் பாதையில் அவர்களுடன் சேர்ந்து நடைபோட வேண்டும் - அவர்களையும் அவர்கள், உலகையும் நன்கு புரிந்து கொண்டு சமூகம் அவர்களை வழிநடத்த வேண்டும் என்பதை சிறுவன் அகமட்டின் அற்புத நடிப்பின் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். கனடாவில் கலாச்சார மாற்றத்தில்*

*வளர்ந்து வரும் இன்றைய தமிழ்த் தலைமுறையைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கும் பெற்றோர் இக்கருத்தைக் கவனிப்பது அவசியம்.*

*ஈரான் நாட்டிற்குச் செல்லும் வாய்ப்பு எம்மில் அநேகருக்குக் கிடைக்காவிட்டாலும், அங்குள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று வந்த உணர்வை இத்திரைப்படம் ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு சிறிய கிராமத்தின் மக்களையும் அவர்களின் எளிமையான வாழ்க்கை முறைகளையும், வாழும் சூழலையும் அன்றாட குடும்ப, சமூக நிகழ்வுகளையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுவதில் வெற்றி பெற்றிருக்கிறார். கமரா இயக்குநர் பாகட் சாவா.*

*1990இல் லொக்கானோ சர்வதேசத் திரைப்பட விழாவில் (Locarno International Film Festival), Bronze Leopard விருதைப் பெற்று மத்திய கிழக்கு நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் பல ஆண்டுகளாகப் பிரபலியமாகிவரும் இயக்குநர் கியரொஸ்ரமி இப்பொழுது வடஅமெரிக்காவின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறார்.*

*1970இல் ஒரு 10 நிமிட பேச்சற்ற 'பாணும் பாதையும்' (Bread and Alley) என்ற கறுப்பு- - வெள்ளைப் படத்தைத் தயாரித்த கியரொஸ்ரமி, ஒரு ஓவியராகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்து, சிறுவர் புத்தகங்களின் வண்ணம் தீட்டுபவராக வளர்ந்து, 'சிறுவரினதும், வாலிபரினதும் அறிவியல் வளர்ச்சி' (Institute for the Interlectual Development of Children and Young Adults) என்ற ஒரு அமைப்பில் சேர்ந்து சிறுவருக்கான பல வெற்றிப் படங்களைத் தயாரித்துள்ளார். பொதுவாக, பரீட்சையமற்ற நடிகரைக் கொண்டு நவ-யதார்த்தப் பாணியில் (Neo-realist style) படங்களைத் தயாரிக்கும் இவர், கிராமங்கள், அதிகாரிகள், படப்பிடிப்பாளர் போன்ற விடயங்கள் பற்றி படங்கள் தயாரித்துள்ளார். ஈரானிய அதிகாரிகளின் கடினமான தணிப்பு விதிகளைக் கருத்தில் கொண்டு தன் எண்ணங்களை நாசூக்காக திரைப்படங்களின் ஊடாகப் பகிர்வதில் இவர் சூரன். யதார்த்தத்தையும் கலையையும் அழகுற இணைப்பதே இவர் படங்களுக்கு வெற்றியளிக்கிறது. சிறுவரின் பார்வையூடாக யதார்த்தத்தைக் கொணர்வதும், கற்பனையையும் ஆராட்சியையும் இணைப்பதும், மீண்டும் மீண்டும் ஒன்றை சொல்வதும் காண்பிப்பதும் இவரது சிறப்பம்சங்களாகும்.*

*தமிழ்த் திரையரங்கில், மைக்கல் ஜக்சன் ஸ்ரயிலில் பாடல்களைப் பாடி, ஆடல்களைக் காட்டி பொருளற்ற கதைகளையும் தேவையற்ற சண்டைகளையும் பொருத்தி இன்றைய தலைமுறையை யதார்த்தத்திற்குப் புறம்பே-ஒரு கனவுலகிற்குள் தள்ளிவிடும் பல பொறுப்பற்ற இன்றைய தமிழ்த் திரைப்பட இயக்குநர்களுக்கும் கலையை ஆழமாக இரசிக்கத் தெரியாது, யதார்த்தத்தைச் சந்திக்கவிரும்பாது திரையரங்குகளை நிரப்பும் அநேக 'விசிலடிச்சான் குஞ்சுகளுக்கும' கியரொஸ்ரமியின் படங்கள் கண்திறப்பதாக இருக்கும் திரைப்பட ரசனையைக் கற்றுக் கொடுக்கும் ஊடகமாகவும் இருக்கும்.*

*திரையரங்குகளின் விளக்குகள் அணைய, பராக்குகள் மறைந்து, பாரப்போர் கண்களெல்லாம் வெண்திரையை நோக்கும். அது ஒவ்வொருவரும் தன்னையும் தன் வாழ்வையும், சூழலையும் பார்க்கும் கண்ணாடியாக மாறத் திரைப்பட இயக்குநர் பாடுபட வேண்டும் - பார்ப்போரை உண்மைக்கு இழுத்துச் செல்ல வேண்டும் - சிந்திக்க வைக்க வேண்டும். வெண்திரை ஓர் சக்தி வாய்ந்த ஊடகம். அதைப் பொறுப்புடன் பயன்படுத்திச் சமுதாயத்தை உயர்த்த வேண்டும்.*

*(இயக்குநர் கியரொஸ்கானின் வெற்றிப்படைப்புகள் சில : Close-up (Nama Ye Nazdik), 1978, 11 minutes ; And His Life Goes On (Zendegi EDA ME Dared), 1992, 91 Minutes ; Under the Olive Trees (Zir e Darakhtan E Zeyton), 1994, 102 minutes)*

# யாழ்ப்பாணத்தில் புதிய தொற்று நோய்

சூரசங்காரன்

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஒரு புதிய தொற்று நோய் வேகமாகப் பரவி வருகிறது. பாடசாலை, பல்கலைக்கழகம், அரச நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் எனப் பல இடங்களில் இந்நோய் வேகமாகப் பரவி வருகிறது. அது என்ன நோய் என்று கேட்கிறீர்களா? அது தான் பாராட்டு நோய். இந்நோய் இரு நிலைகளில் வெளிப்பாடடைகின்றது. ஒன்று பத்திரிகை விளம்பர அறிவித்தல்கள் ஊடாக பாராட்டுதல்கள் நடைபெறுதல். இது ஆரம்பநிலை. மற்றது விழா எடுத்து, மலர் மாலை சூட்டி, நகரப் பிரமுகர்கள் எல்லோரும் சேர்ந்து உலகத்திலேயே மிகச் சிறந்த மனிதர் இவர் தான் (சில வேளைகளில் யேசு நாதருக்கு ஒப்பானவர்கூட) என்று கூறி ஒருவரைப் பற்றி பாராட்டுதல்கள் நடத்தல். இது முற்றிய நிலை.

அது சரி, பாராட்டுவதற்கான விடயம் என்ன என்று கேட்கிறீர்களா? அதற்கு பெரிதாக ஒரு விடயமும் தேவையில்லை. மாணவராயிருந்தால் அவர் ஏதாவதொரு பரீட்சைக்கு தோற்றியிருந்தால் சரி (அது ஆண்டு 2 தவணைப் பரீட்சையாக கூட இருக்கலாம்). பல்கலைக்கழகம், அரச நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களானால் அங்கு ஒருவருக்கு புதிதாக உயர் பதவி கிடைத்தால் சரி ஏனைய விடயங்கள் மிகச் சுலபமாகவே முடிந்து விடும். யாழ்ப்பாணத்தில் தற்போது பாராட்டுப் பெறுபவர்கள் போல் பாராட்டுபவர்களுக்கும் குறைவேயில்லை. சிறுவர்கள் தொடக்கம் முதியோர் வரை, பற்றற்ற துறவிகள் தொடக்கம் கற்றறிந்த கல்விமான்கள் வரை எல்லோரும் பாராட்டுவதற்கு தயாராகவே இருக்கிறார்கள். வாரி வழங்க வர்த்தகர்கள் இருக்கிறார்கள். இது தான் இன்றைய யாழ்ப்பாண பாராட்டு நிலை.

இதைவிட, யாழ்ப்பாணத்தில் சீவிக்கவே முடியாது என்று கொழும்பில் அடம்பிடித்துக் கொண்டு நின்று அங்கு இந்தப் பாராட்டு விழாக்களை நடத்தும் "முற்போக்கானவர்கள்" இருக்கிறார்கள். அவர்கள் வேறு வகை.

**இப்புதிய தொற்று நோயின் ஊற்றுக்கண் கனடிய மண்ணிலே மையங் கொண்டுள்ளதை யாழ்ப்பாண மக்கள் அறிவார்களா?**

அது சரி, இன்றைய யாழ்ப்பாணம் பாராட்டப்படவேண்டிய நிலையிலா இருக்கிறது. ஒருகாலத்தில் இலங்கை முழுவதிற்குமே வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கித்தந்த பெருமை படைத்த யாழ்ப்பாணத்தில் தற்போது இவர்களுக்குத்தான் பெரும் பஞ்சம். வைத்தியர்கள் இல்லாத மருத்துவ மனைகள், ஆசிரியர்கள் இல்லாத மருத்துவபீடம், கூரையும் ஆசிரியரும் இல்லாத பல பாடசாலைகள், மீளக் குடியேற வந்து இன்னமும் வீதியிலே விழிபிதுங்கி நிற்கும் மக்கள் இவையெல்லாவற்றிற்கும் காரணங்கள் கண்டு பிடித்துக் கூறும் அரச நிர்வாகிகள் நிறைந்ததே இன்றைய யாழ்ப்பாணம்.

கால்வைத்த இடமெல்லாம் கண்ணிவெடி, கண்படும் இடமெல்லாம் முள்வேலியும், பாழடைந்த கட்டடங்களும் இருபத்தோராம் நூற்றாண்டை மின்சாரமின்றிச் சந்திக்கப் போகும் பெருமை மிக்க ஒரே இனம் வட இலங்கைத் தமிழினமாகத்தான் இருக்கப் போகிறது.

ஒரு சமூகத்தில் பாராட்டு விழாக்கள் நடத்தக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். நடத்தலாம். ஆனால் பாராட்டு விழா பாராட்டு வர்த்தகமாகிப் போகிற நிலைதான் பரிதாபமானது. இன்று யாழ்ப்பாணத்தில் அது ஒரு நோயாகவே ஆகிவிட்டது.

*அன்றைய யாழ்ப்பாணத்திலும் பாராட்டு வைபவங்கள் நடந்தன. பதவியிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்கள், அதிகாரிகளுக்கு அந்தந்த நிறுவனங்களிலேயே நடந்தன. சேவையை மதிக்கும் செயலாக இயல்பாக எந்த நிர்ப்பந்தமும் இன்றி நடந்தன. பாடசாலை ஆசிரியர்களின் பிரிவுபசாரத்தின் போது கண்ணீர்மல்க விடைதரும் மாணவர்களையும், ஆசிரியர் குழாத்தையும் அங்கு கண்டோம்.*

*அன்றைய யாழ்ப்பாணத்தில் பதவியில் சேரும்போதோ பதவியில் சேர்ந்த சில மாதங்களுக்குள்ளோ எவரும் பாராட்டப்பட்டதேயில்லை.*

*குறிப்பாக அரச ஊழியர்கள் தாம்பெறும் சம்பளத்திற்கு தமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வில் தான் செயல்பட்டனர். கடமையைச் சரிவர செய்யாதவர்கள் விமர்சிக்கப்பட்டனர்.*

*அன்றும் சோதனைகளில் மாணவர்கள் சித்தியடைந்தார்கள். மாணவர்களை ஆசிரியர்களும், பெற்றோரும் வாழ்த்தி மகிழ்வித்தனர், ஊக்குவித்தனர். சற்றுக் குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்களும், சித்தியடையாத மாணவர்களும் மனம் நோகாத வகையில் பாராட்டினார்கள். சித்தியடைந்த மாணவர்களை அவர்கள் பெற்ற புள்ளிகளை வரிசைப்படுத்தி ஏனைய மாணவர்களிலிருந்து பிரித்தெடுத்து பத்திரிகை விளம்பரம் செய்து பாராட்டவில்லை.*

*பயன்கருதாப் பணிசெய்த பெரியவர்கள் பலர் வாழ்ந்த நாடு இது. அவர்களில் பலர் தம் வாழ்நாளில் பாராட்டப்பட்டார்களா என்பது கேள்விக்குறி?. தவிர அவர்களில் பலர் பாராட்டுப் பெறுவதையே விரும்பவில்லை. அதனால் அவர்களால் அன்றைய சமூகத்தை நேர்மையுடனும் துணிவுடனும் விமர்சிக்க முடிந்தது. போலி மனிதர்கள் காலத்திற்கு காலம் ஆதிக்கம் பெற முயலும் போது அவர்களைத் தோலுரித்துக் காட்டிய பாரம்பரியமும் யாழ்ப்பாணத்திற்கு உண்டு. அந்த வரிசையில் ஆறுமுக நாவலருக்கும் இடமுண்டு. 1872இல் அக்காலத்துப் போலி மனிதர்களை காரசாரமாகக் கண்டித்து "யாழ்ப்பாணத்துச் சமயநிலை" என்ற நூலை எழுதினார். அந்தப் போலி மனிதர்களை எப்படி அடையாளம் காண்பது பற்றி அந்நூலின் இறுதியில் வரும் சில வாக்கியங்களை காலப் பொருத்தம் கருதி இங்கு தருகிறேன்.*

*".... பூசனிக்காயெடுத்தவனை தோளிலே தெரியும் என்றார் போல ஒரு உபாயஞ் சொல்லுவேன் கேளுங்கள். இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுதுங் கேட்கும் பொழுதுங் வாய் புறு புறுத்தலிலுங், உதடு துடித்தலிலுங், கண் சிவத்தலிலும், சரீரம் படபடத்தலிலும், இடையில் எழுந்து ஓட்டம் பிடித்தலிலும் அவர்களை அறிந்து கொள்ளலாம். விடாதேயுங்கள்"*

*(யாழ்ப்பாணச் சமயநிலை: பக் நுச)*

*ஆறுமுகநாவலரின் தேசாபிமானத்தையும் யாருக்கும் அஞ்சாத, துணிவையும் கீழ்வரும் வரிகள் புலப்படுத்தி நிற்கின்றன.*

*"பொதுப்படப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னோம். திருந்த விருப்பமுடையவர் திருந்தட்டும், திருந்த விருப்பமில்லாதவர் தமக்குப் பயன்படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன்படலாமே என்றெண்ணி வாய் மூடிக் கொண்டிருக்கட்டும். நாங்கள் எப்படி நடக்கினும் நடப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்பார்க்கு, நாம் எப்படிக் கண்டிப்பினுங் கண்டிப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்போம். பிறர் செய்யும் அநீதிகளைக் கண்டித்தற்கு நீர் யார்! கடவுளோ அரசரோ என்பார்க்கு கடவுள் கட்டளைக்கும் மாறாகவே பிறர் செய்யும் அநீதிகளை, அக்கட்டளைக்கு அமைந்து, கண்டித்தலாகிய நமது நீதியை கண்டிப்பதற்கு நீர் யாரோ சற்றே பேசும் என்போம். ஆகா! பல மனிதராலும் பகைக்கப்பட்டீர் இனிக் கெட்டீர் என்பார்க்கு, ஓகோ கடவுளுக்க்ஞ்சும் அச்சம் பெருகப் பெருக மனிதருக்கஞ்சும் அச்சம் குன்றிக் குன்றி விடும் என்பதறியீர் போலும் என்போம். எவ் விதத்தாலும் வாயெடுக்க ஒட்டோம் ஒட்டோம்" (யாழ்ப்பாணச் சமயநிலை. பக் நுச.)*

*இன்று நம்மிடையே நாவலர்கள் இல்லை. ஆனால் அவர் வளர்த்த தேசாபிமானம் உண்டு. அதைப் பேணுவதவசியம்.*

*அதிகாரத்தில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மனங்குளிரப் பண்ணி நாமும் குளிர்ந்து போகும் போக்கு எம்மிடமிராது, எப்போது மாறும். ஏன் செய்கிறோம், எதற்கு செய்கிறோம் என்று பகுத்தாராயாது எல்லோரும் செய்வதால் நாமும் செய்வோம் என்ற மந்தை மனப்பான்மை எப்போது எம்மிடமிருந்து நீங்கும்.*

*பாழடைந்த இன்றைய யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப பாராட்டு விழாக்கள் தேவையில்லை. பிரதிபலன் கருதாது மக்களுக்கு பணி செய்ய விழையும் நல்ல நிர்வாகிகளும் துறை வல்லுனர்களும் பகுத்தறிவுடன் செயற்படும் மக்களுமே தேவை.*


---

# கண்ணீர்


தீக்குச்சி கிழித்துப் போட்டாற்போல்
மேற்குத் தொடர்வானில்
நெட்டிமுறித்தது
மின்னல்.
காற்றின் வீச்சில் சிவந்தது
மரங்களின்
காது நுனிகள்.
கருமேகம் மூடிய நிலவின்
காயம் பற்றி
யாருக்குக் கவலை.
ராத்திரிச் சாலையின்
பளபளப்பெல்லாம் கழுவியபடி
மழை இறங்கிற்று
தாரை தாரையாய்.
தண்ணீர்ப் படலத்தில்
கலங்கின சாலைகள்.
என் கண்ணீர்ப் படலம் பற்றி
யாருக்கு கவலை.

பிரியந்ந்

சேதிகள் சேகரிக்கும் செவிகள்
தேனீர்ச்சாலை



ஓவியம்: *Ramananda Bandyopadhyay*



சுதா சுப்ரமணியம்

*இருளின் வியாபகத்தில் ஓர்*
*ஒளிக்கீற்றின் ஊடுருவல்*
*துயரமே கண்ட பார்வையில்*
*வண்ணத் தூறல்களால்*
*எழும்*
*பரவச உயிர்ப்பு*
*மௌனித்த ஒலிகளில் புதிதாய்*
*காலைப் பறவைகளின் சங்கீதம்*
*தனிமையில் புழுங்கிய ஆத்மா*
*நட்பின் அர்த்தங்களை வருடியபடி*
*வெற்றியின் வேர்களைத் தேடி*
*மீண்டும் துளிர்க்கிறது*
*என்றாலும்*
*இருளுக்குள் இருப்பது*
*வித்தியாசமானது*
*சிக்கல்கள் ஏதுமற்ற*
*பேதங்கள் புலனாகாத*
*முழுவதும் எனக்கே என்றான......*


*எப்படி புரிய வைப்பேன்*
*ஓ!*
*இருள் என்பது எனது உலகம்*
*எனது மட்டுமே.*

தமிழில்:- ரிஷி

Dr. புஸ்பராணி கரன் வன்னித்தம்பி

**Dentist**

வாரத்தில் ஏழு நாட்களும்
சகல பல் வைத்திய சேவைகளும்




2558 Danforth Ave. Suite #206
Toronto - ONt. M4C 1L3
416-690-2438

# கரிச்சானின் ஞாபங்கள்

*இந்த மருத நிலம், வரலாற்றுக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட பூர்வீக பூமியல்ல......!*
*முன்னாள் "முல்லை" நிலம்.*
*புகலிடப்புலப் பிள்ளைகள் போல, வெள்ளக்காலத்தில்*
*தறிகெட்டோடிய ஆறுகள்,*
*ஒரு அணையின் அரவணைப்புக்குள் அடங்கிய பிறகுதான், இந்த முல்லை தேசத்தின் நீர் நரம்புகள் ஒழுங்கமைதியோடு ஓட ஆரம்பித்தன.*
*மெல்ல மெல்ல முல்லையின் பரிணாமம் மருதத்தை நோக்கி நகர்ந்தது.*
*திமிறிப் பாய்ந்த ஆறுகள்,*
*கட்டுப்பட்டு, கால்வாய்கள் ஆக*
*வனங்கள் வயல்களாய் உருமாற்றம் செய்து கொண்டன*
*என் நினைவுக்குக் கிட்டிய ஒரு காலத் தூரத்தில்த்தான்*
*என் ஊர்க் குடியிருப்புகள்,*
*"காலணி" என்ற அந்நியப் பெயரோடு, அத்திவாரமிட்டுக் கொண்டன.*

*ஊருக்குள் இருக்கும் குடியிருப்புகளில் இருந்து,*
*கொஞ்சம் ........... கொஞ்சமல்ல, தூரமாகவே விலகி இருந்தது,*
*எங்கள் வீடு.*
*நீரோடும் கால்வாய்களுக்கும், நெல்வயல்களுக்கும் மத்தியில், விவசாய வசதி கருதி,*
*தன்னை தனிமைப்படுத்தியிருந்தார் தந்தையார்.*
*வித்தியாசமான அந்த சூழலிலே, ஆசான் இல்லாமலே அறிந்து கொண்ட....,*
*இல்லை அடிபட்டுக்கொண்ட அனுபவங்கள் ஏராளம்,*
*இதில்...........கொஞ்சமாய் அவை பற்றி......,*
*இன்னமும்,*
*இழந்து போனதிற்காய் வருத்தப்படுகின்ற அந்த வயது,*
*வாழ்க்கைச் சக்கரத்தில் பச்சையங்கள் செறிந்த பருவம்,*
*சில நிகழ்கால அஜீரணங்கள்,*
*அந்த இறந்த கால நிறைகளால்த்தான் இப்போதும் ஜீரணமாகின்றது,*
*அவ்வப்போது வறுமை வந்து வாசல் ஏறினாலும்,*
*அதை பட்டுத் தெரியாத, தொட்டு உணராத பாலகத்தனம்*
*எம் வயதிற்கிருந்தது,*
*எம் சூழலுக்குமிருந்தது.*
*பசித்தவேளைகளில்,*

*வீட்டிற்குள் வெறுமை வெளிச்சம் போட்டபோதெல்லாம்,*
*தாயின் அருகிருந்தது, தவித்ததாய் எனக்கு ஞாபகம் இல்லை.*
*என் மாற்றாந்தாயின் மடியின் "கனம்"*
*என் மனதிற்குத் தெரியும்.*
*அவள் காமதேனு, கற்பகதரு, அமுதசுரபி,*
*வரிசையாய் நாங்கள் ஏழுவாரிசுகள்,*
*தாயின் மார்பகமும் பசுவின் மார்பகமும் சுரந்து ஓய்ந்த போதெல்லாம்,*
*தாரையாய் தன்னைவார்த்து, எம்மை வளர்த்தது,*
*மாற்றாந்தாயின் மார்பகமே!*
*நீர் நிறைந்த வயல்களும், சூழவிருந்த வனமுமே*
*எங்கள் மாற்றாந்தாய்.*
*வண்டுகள் கூட, வந்து தீண்டாத பரிசுத்தம் அந்த தாமரைக் குளத்திற்கு,*
*அழகிய பூக்களோடு அருஞ்சுவை சொல்லும் தாமரைக்காய்கள்.*
*கல்லெடுத்துக் கோதுடைத்தால் மட்டுமே,*
*உள்ளிருக்கும் சுவை சொல்வேன் என்றுரைத்த தாண்டிக்காய்கள்*
*பச்சைவயல் புதர்களில் இயற்கை ஏற்றிய செம்மஞ்சள் மின்குமிழ்களாய்,*
*கொவ்வைப் பழங்கள்,*
*முல்லை நில எச்சங்களாய் மருதத்தில் இன்னமும் மிச்சமிருக்கும் பாலைப்பழங்கள்,*
*யானையின் தும்பிக்கைத் தூரத்திற்கு எட்டாத உயரத்தில்,*
*எஞ்சியிருக்கும் விளாம்பழங்கள்,*
*வீரைப் பழங்கள் சூரைப்பழங்கள், கூழாம் பழங்கள்*
*கழுவிப் போகாத கறைகளுக்காய் "அறை" வாங்கிக் கொடுக்கும் நாவல் பழங்கள்.*
*என் பாசத்தில் பாதியை பகிர்ந்து கொண்டவை,*
*இந்த ஓருயிர் ஜீவன்கள்தான்,*
*அந்த வனங்களில் தாவித்திரியும் உரிமை குரங்குகளுக்கும் எமக்கும் சமமாகவே இருந்தது.*
*இந்த இனிய வனவாசத்தின் இரு பிரதான எதிரிகள் பள்ளியும், படிக்கையுமே!*
*இவற்றை விடவும்,*
*பறவைக் குஞ்சுகளுக்கும் எமக்கும் பயமூட்டும் மற்றொன்றும் வனத்திற்குள் இருந்தது.*
*படைகளும் தொடைநடுங்கும் பாம்புதான் அது.*
*வயல்கள் நீரேற்றிக் கொள்ளும் கோடைகாலத்தில்,*
*எறும்புகள் போல பாம்புகள் ஊரும் ஊர் நம்மூர்,*
*ஆரம்ப காலங்களில்,*
*இக்கிராமத்து இறுதி ஊர்வலங்களுக்கு,*
*பாதிக்காரணம் பாம்புகளும், நுளம்புகளுமே!*
*வாரிசுகளில் மூத்தவன் நான்,*
*எனினும்*
*வனப்பிரவேச வரிசைக்கு மூத்தவன் என் இளவல்,*
*இவன்,*
*நம் வனவாச குழாமில் பீமன்.*
*பாம்பின் கால்கள் ஏனைய பாம்புகளுக்கு மட்டுமல்ல,*
*இவனுக்கும் பரிச்சயம்.*
*சுற்றாடல் சுவாசத்தைக் கொண்டே அரவ நடமாட்டத்தை அனுமானிக்கும் ஆற்றல்,*

இவனுக்கிருந்தது,
சேகரிக்கும் பழங்களில் நம் கவனம் இருக்க, பாம்பைக் கொன்றொழிக்கும் பணியில் அவனிருப்பான்,
அதிலும் ஒரு அதிசயம் இருந்தது.
பாம்புகளோடு எப்போதும் நிராயுதபாணியாகவே மோதுவான்.
ஒரு கண்ணிமைப் பொழுதுக்குள்,
பாம்பின் வால்பற்றி,
தேர்ச்சியான - ஒரு உலுப்பலின் பின், தூரமாய் எறிந்துவிட, இறந்து விழும் பாம்புகள்.

நாங்கள் உரத்தை, உள்ளத்திற்கும், உடலிற்கும் ஏற்றிக் கொண்ட பயிற்சிப்பட்டறை, இந்த வனங்களும் வயல்களுமே!
சின்னதாய், சிறியதாய் எத்தனையோ ரகசியங்களைச் சொல்லித்தந்தாள் இந்த மாற்றாந்தாய்.
அந்த வனவாசத்து சிராய்ப்புகளும் கீறல்களும்,
வடுக்களாக அல்ல,
ஒரு போர்க்கள விழுப்புண்களாகவே என்னைப் பெருமிதப்படுத்துகின்றன.
இந்த கரிச்சானின் கோலத்தில்,
உங்களுக்கான சேதிகள் எதுவும் இருக்காது,
சேதியொன்றைச் சொல்லக்கூடிய அறிவின் சேமிப்புகள்
இன்னமும் என்னிடம் இல்லை,
இனியும் சேமிக்க முடியுமா என்பதற்கு நிச்சயமில்லை.
அப்படியொரு நிச்சயம் நிரூபணமாகும்வரை,
இறந்து போகாத இறந்த காலத்தை,
இந்தப் பக்கங்கள் வாயிலாக,
உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கு அனுமதி உண்டல்லவா!

**கரிச்சான் குஞ்சன்**

# ஒரு சொப்பனம்

**- அடோனிஸ்**

பிறந்த மேனியராய் வந்தனர்
கன்னமிட்டு வீடு புகுந்தனர்
குழியொன்றைத் தோண்டினர்
குழந்தைகளைப் புதைத்துப் போயினர்

# அலென் கின்ஸ்பேர்க்

என். கே. மகாலிங்கம்

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அமெரிக்காவில் அமெரிக்கரின் பொருள் தேட்டத்திற்கும் சுரணை அற்ற வாழ்க்கை முறைக்கும் எதிராக இயங்கிய "பீற்" (Beat) இயக்கம் மிகப் பிரசித்தமானது. அக்கால இளைஞர்களின் சமூக, இலக்கிய இயக்கம் அது. ஒழுக்கக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்த கலை இயக்கமும் அதே. "பீற்" என்றால் சோர்ந்து அல்லது அலுத்துப் போனவர்கள் என்ற அர்த்தத்துடன் ஆரம்பத்தில் அது நடைமுறைக்கு வந்தது. பேரின்பத்தை நாடுபவர் என்றும் கருதப்பட்டனர். சிலவேளை "பீற்னிக்ஸ்" (Beatniks) என்று சிறுமைப்படுத்துகிற வார்த்தையாலும் அவர்கள் அழைக்கப்பட்டனர்.

ஹிப்பிகள் என்று பொதுவாக அழைக்கப்படும் அவர்கள் மரபுகளுக்கு எதிரானவர்கள். அந்நியப்பட்ட தன்மையில் வாழ்ந்தவர்கள். அவர்களுடைய உடை, நடை, சொற்கள் அனைத்துமே சமூக மரபுகளுக்கான எதிர்ப்பைத் தெரிவித்தன. அவர்களுடைய பல சொற்கள் ஜாஸ் (Jazz) இசையிடம் இருந்து பெற்றவை. அரசியலில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. சமூகப் பிரச்சினைகளைப் பற்றிக் கவலை இல்லை. சுயத்தைப் புனிதமாக்கல் என்ற கைங்கரியமே அவர்களுக்கு முக்கியம். போதைப் பொருள் பாவித்தல், ஒழுக்கக் கட்டுப்பாடற்ற பால் உறவில் ஈடுபடுதல், ஷென் புத்த சமயப் பயிற்சி போன்றவை அவர்களின் ஊடகங்கள்.

அவர்களின் இயக்கப் பிதாமகர்களாக கருதப்பட்டவர்களுள் ஒருவர் கவிஞர் அலென்கின்ஸ்பேர்க். அவர் இவ்வருடம் ஏப்ரல் 5ம்திகதி இறந்தார். அவர் மரபுகள் அனைத்தையும் உடைத் தெறிந்தவர். எதிர்க் கலாச்சாரத்தின் குரு. அவர் காலத்தில் இருந்தவர்களுள் அவரின் செல்வாக்கு அளவிட முடியாதது. பீற் பரம்பரையினரின் கவிஞர். பின் வந்த நான்கு தசாப்தங்களிலும் ஓவியம், இசை, அரசியல் ஆகியவற்றில் எல்லாம் அவரின் செல்வாக்கு உண்டு.

போதைப்பொருள் தூண்டிய தரிசனம், கட்டுப்பாடற்ற (Hedonistic) பாலுறவு நடத்தைகள், குடலைப் புரட்டும் சுயசரிதை ஆகியவற்றால் அவர் தெரிய வந்தார். இறுதி நாட்களில்கூட ஒரு டசின் சிறு கவிதைகள் எழுதினார். அதில் ஒன்று "புகழும் இறப்பும்". அத்துடன் "களைத்து விழும் வரை கதைத்துக் கொண்டே" அவர் நண்பர்கள், காதலர்கள் மத்தியில் இறந்தார் என்றும் கூறப்படுகிறது.

அவரைப் பின்பற்றியோர் பிரசித்தமான பலர். "பொப்" கலாச்சாரர்களில் இருந்து செத்தலைவர் வக்லவ் ஹவல், "பங்" (Punk) கவிஞர் பற்றி சிமித், யோகோ ஒனோ, பொப்டிலான் என்று பலர்.

அவருடைய ஆசார அழிப்புக் கவிதையும் விரிவு விளக்கக் கவிதையுமான Howl என்பதில் தன் சுயபால் ஈர்ப்புப் பற்றியும் கொம்யுனிஸ்ற் வளர்ப்புப் பற்றியும் கூறுகிறார். அக்கவிதையில் "என் காலச் சிறந்த அறிவாளிகள் மூளைக்கோளாறினால் நிர்வாணமாக அழிவதைப் பார்த்தேன்" - என்கிறார்.

Howl பிரதிகள் பொலிசாலும் கஸ்ரம்ஸ் ஆலும் கைப்பற்றப்பட்டு ஆபாசநூல்

என்று தடை செய்யப்பட்டது. அதனால் சடுதியாகப் புகழும் வந்து சேர்ந்தது. இது 1957ல் பீற் இயக்கத்துடன் இயங்கிய அவரே ஜேனரேசன் எக்ஸ் (Generation X) - புதிய பரம்பரையினர் - இயக்கத்தினருக்காக 1997ல் ஆவுஏல் கவிதையும் வாசித்தார். காலம் மாறியும், வயது முதிர்ந்தும் அவர் இளைஞராகவே இருந்தார். அவர் 1926 யூன் 3ம் திகதி நியூயேர்சியில் பிறந்தவர்

அவர் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் வயது 17ல் - ஜக் கெராவக், வில்லியம் எஸ்.பரோஸ், நீல் கசடி போன்றவர்களைச் சந்தித்தார். இவர்களும் பீற் இயக்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், எதிர்க் கலாச்சாரத்தினர். சுயபால் உரிமைகள், மர்வாணாவை (marjuana) குற்றத் தண்டனையில் இருந்து நீக்கி விட வேண்டும் என்பன அவரின் போராட்டத்துக்கான காரணங்கள்.

1960களில் போதைப் பொருட்கள் சாப்பிட்டு பரிசோதனைகள் செய்தார். திமொதி லீரி என்ற பிரபல்யமான எல்எஸ்டி குருவின் - அவரும் கடந்த ஆண்டு இறந்து போனார் - கீழ் எல்எஸ்டி அருந்தினார். அத்துடன் தினமும் காலையில் புத்தசமயத் தியானப் பயிற்சிகள் செய்தார். படிப்படியாக பிரதான நீரோட்டத்தினர் அவரை ஏற்றுக் கொள்ளவும் ஆரம்பித்தனர்.

அவரின் ஒரு கவிதை:

இரவு அப்பிள்

நேற்றிரவு
நீண்ட ஏழாண்டுகளாக
நான் காதலித்த ஒருவனைக்
கனவில் கண்டேன்
ஆனால் அவனின் முகத்தைக் காணவில்லை
பழக்கமான அவனின் உடலை மட்டுமே
கண்டேன்
வியர்த்த தோல் கண்கள்
மலம் சலம் இந்திரியம் எச்சில் அனைத்தும்
ஒரே மணம் கூடவே உயிர் அழியாத ருசி

1968ல் நடந்த தேசிய ஜனநாயக மாநாட்டிற்கு எதிராக ஏழு பேர் எதிர்ப்பு நடத்தினர். அதில் கின்ஸ்பேர்க்கும் ஒருவர். அவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்தது அரசு. அந்தக் கொந்தளிப்பான வழக்கில் கின்ஸ்பேர்க் சாட்சியம் அளித்தபோது இந்தக் கவிதையின் சமய முக்கியத்தை விளக்கச் சொல்லி அவர் கேட்கப்பட்டார். அதற்கு அவர் "Wet dream -கனவினால் ஏற்படும் இந்திய ஒழுக்கை சமய அனுபவம் என்று உங்களால் எடுத்துக் கொள்ள முடியுமானால் இந்தக் கவிதையையும் என்னால் அப்படி எடுத்துக் கொள்ள முடியும். இது இந்திரிய ஒழுக்கக் கனவு விவரணை, ஐயா." என்று பதில் கூறினார்.

இன்னொரு நீண்ட கவிதையான "அமெரிக்காவே" என்பதில் இருந்து சில பகுதிகள் இதோ:

அமெரிக்காவே!

அமெரிக்காவே, நான் உனக்கு அனைத்தையும் தந்துவிட்டேன். இப்போ என்னிடம் எதுவுமே இல்லை. இரண்டு டொலர் இருபத்தைந்து சதம் மட்டும். இன்று ஜனவரி 17, 1956.
என் மனதையே என்னால் பொறுக்கேலாது.
அமெரிக்காவே எப்போது நாம்மனிதப் போரை நிறுத்துவோம்.

உன் அணுக்குண்டுடன் நீ போய்ப் படு.
நான் உண்மையானவனாக இருக்கும் வரை நான் கவிதை எழுத மாட்டேன்.
அமெரிக்காவே நீ எப்போது தேவதையாவாய்?
எப்போது நீ உன் உடுப்பைக் களைவாய்?
எப்போது நீ உன் கல்லறை ஊடாக உன்னைப் பார்ப்பாய்?
உன் மில்லியன் கணக்கான றொட்ஸ்கியவாதிகளின் மதிப்பை எப்போதுணர்வாய்?
அமெரிக்காவே உன் நூலகங்கள் ஏன் கண்ணீரால் நிறைந்துள்ளன?
............. ............
உன் யந்திரங்கள் எனக்கு
அதிகமாய்ப் போயின
நீ என்னைத் துறவியாக்க விரும்பினாய்?
..... ........
புதினப் பத்திரிகைகளை நான் மாசக் கணக்கில்
வாசிக்கவில்லை. தினமும் எவரோ ஒருவர்
கொலைக் குற்றத்திற்காக விசாரணைக்குச் செல்கிறார்
..... ........
நான் சிறுவனாக இருந்தபோது
கொம்யூனிஸ்ராக இருந்தேன்
அதற்காக நான் கவலைப்படவில்லை
சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்
நான் மருவாணா புகைக்கிறேன்
நாட்கணக்காக வீட்டுள் இருந்து
பெட்டிக்குள் இருக்கும் றோசாப்பூவை
விறைத்துப் பார்க்கிறேன்
....... ..........
நான் மாக்சை வாசிப்பதை நீ பார்த்திருப்பாய்.
என் உளவியல் அலசல்காரர் நான் பூரணமாகச் சரி என்றே சொல்கின்றனர்.
நான் ஆண்டவனின் பிரார்த்தனையைச்
சொல்லமாட்டேன்
என்னிடம் மறைஞானத் தரிசனங்களும் பிரபஞ்ச
அதிர்வலைகளும் உள்ளன.
உனக்குச் சொல்கிறேன்.
உன் உணர்ச்சி வாழ்வை ரைம்
சஞ்சிகையால் வழி நடத்திவிடப் பார்க்கிறாயா?
........ .........
அது எப்போதுமே பொறுப்புணர்வைப் பற்றியே சொல்கிறது.
வியாபாரிகள் சீரியஸானவர்கள். படம் தயாரிப்போர் சீரியஸானவர்கள்.
எல்லோருமே சீரியஸானவர்கள் என்னைத் தவிர.
நான் தான் அமெரிக்கா வென்று
எனக்குப் படுகிறது.
......... .......
என் ஆசை ஜனதிபதி ஆவதே
நான் கத்தோலிக்கனாக இருந்தபோதும்.
அமெரிக்காவே, என் மடத்தனமான
மனோநிலையில் என்னால் எப்படி

*ஒரு வழிபாட்டுப் பாசுரத்தை என்னால் எழுத முடியும்?*
....... ..........
*நான் சரியானதையே செய்ய வேணும்.*
*இராணுவத்தில் சேரவோ தொழிற்சாலையில் லேத்*
*மெசினை ஓட்டவோ விரும்பவில்லை. நான்*
*கிட்டப் பார்வைக்காரன். உளநோய்க்காரன். அது உண்மை.*

*(இக்கவிதையைப்புரிந்து கொள்வதற்குச் சில வரலாற்றுப் பின்னணிகள் உதவும)*
*1956 அளவில் அமெரிக்கா சென்ற்ர் ஜோசப் மக்காதியில் நம்பிக்கை இழந்துவிட்ட போதிலும் அவருடைய கொம்யூனிஸ்ற்றுகளை வலைவிரித்துப் பிடித்தல் கொள்கைகளும் நினைவுகளும் மாற்றுக்கட்சியினரைத் திணற வைத்தன. அக்காலத்தில் கின்ஸ்பேர்க்கின் இக்கவிதைப் பிரசுரம் ஒரு துணிகரமான செயல்.*

*அவரின் தாயார் ரஷ்யாவிலிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தவர். கொம்யூனிஸ்ற் கட்சியின் தீவிர அங்கத்தவர். றொட்சியவாதிகள் அக்காலத்தில் தீவிர அமெரிக்கக் கொம்யூனிஸ்டுகள்.*

*வில்லியம் பரோஸ் (1959) த நேக்கட் லஞ் நாவலின் ஆசிரியர். இவர் சென்ற கிழமை காலமாகிவிட்டார். 1957வரை ஹீராயின் போதை வஸ்து பாவித்தவர். 1950ல் அமெரிக்காவை விட்டு விசாரணைக்குப் பயந்து ரஞ்ஜியர்ஸிக்கு ஓடிவிட்டவர்.)*

---

# இலையுதிர்காலத்திற்கு ஒரு கண்ணாடி

**- அடோனிஸ்**

*இலையுதிர் காலத்தின் சவத்தைச் சுமந்தபடி*
*பெண்ணொருத்தி போவதை நீ பார்த்தாயா?*
*தன் முகத்தை நடைபாதையில் தேய்த்தபடி*
*மழையின் இழைகளால் பெண்ணொருத்தி*
*ஆடை நெய்வதை நீ பார்த்தாயா?*
*மனிதர்,*
*நடைபாதை மீது*
*சுட்டெரித்த கரித்துண்டுகள்.*

# “தலை”யாய சுமைகள்

ஹற்றன் தோட்டத்தில்



புகைப்படம்:
*Dexter Cruez*



●

*எதை எழுதித் தொலைக்க*
*மனிதமரணத்தைக் கூட புசித்துச் சுகித்திருக்கும்*
*அற்ப மானுடப் பதர்கள் மத்தியில்*
*நக்கிற நாயக்கு செக்கென்ன சிவலிங்கமென்ன.*

●

*யாழ்ப்பாணத்தில் திருவிழாக் காலமிது*
*கோவில் வீதிகள் தோறும் கடை வரிசைகள்.......*
*காப்பு , கடகம்பெட்டி, கடலை, புடவை, பாத்திரம், மிட்டாய்.......*
*இதற்கு நிகராய் நாங்கள் கனடாவில் என்ன செய்யலாம்*
*இப் பாரம் பரியத்தை இங்கு எப்படி வியாபாரமாக்கிப் பணம் பண்ணலாம்*
*கம்பியூட்டர் மூளைகள் சில மண்டையைப் பிய்த்ததில் கிடைத்த அற்புதந்தான் கனடாவில் வர்த்தகக் கண்காட்சி.*
*வெறும் கடைகள் மட்டுமே போதாது என்பதால் மேடை போட்டு சின்னமேளம் வேறு-*
*கடந்த இரண்டாண்டுகளாக கடைக்காரரிடம் பணங்கறந்தவர்கள் இம்முறை கடைவீதி பார்க்கப் போனவர்களிடமும் ஒரு டாலர் வீதம் கறந்து விட்டார்கள்*
*அடுத்த வருடம் இது இரட்டைமடங்காகலாம். சின்ன மேளங்கூட "நவராகம் புகழ்" நாட்டியத் தாரகைகள் வழங்கும் என்றோ, கனேடியத் திரைவானின் நட்சத்திரங்கள் கலந்து கொள்ளும் என்றோ விளம்பரங்கள் வரலாம்.*
*எதுவும் இங்கே சாத்தியமாகலாம்.*
*இந்தியாவில் 'றைக்கோட் டான்ஸ்' என்ற பெயரில் தொடங்கிய 'டப்பாங் கூத்து' இலங்கை வந்த போது 'சின்ன மேளமாகி' கனடாவுக்கு கப்பலேறியபோது 'திரையிசை நடனம்' என புதிய பரிமாணம வளர்ச்சி கண்டுள்ளது*

'புதிய மொத்தையில் பழையகள்ளு'
யாழ்ப்பாணத்தில் சின்ன மேளக்காரிகள் என்று நையாண்டி பண்ணிணவர்கள் இங்கு திரையிசை நடனத்திற்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பிப் பெருமைப்படுகிறார்கள்.
முன்பெல்லாம் இந்தியாவிலிருந்து சின்னமேளக் காரிகளை இலங்கைக்கு வரவழைத்து திருவிழாக்கள் நடத்திய பாரம்பரியம் எங்களுக்குண்டு.
இப்பாரம் பரியம் மேடையிலாடும் கூத்தை மட்டும் ரசிப்பதோடு நின்று விடவில்லை. 'கூத்தி' யாக்கிப் பார்த்ததுமுண்டு.
மேடையிலாடும்போது பிடித்திழுத்து கொலையில் முடிந்த வரலாறுகளுமுண்டு
இவை வரலாறுகள் மட்டுமல்ல.
இன்றும் நாங்கள் இந்தியாவிலிருந்து நாட்டியத் தாரகைகளை வரவழைத்து 'திரு' விழாக்கள் நடத்துவதும், பெருங் கூட்டம் கூடுவதும் காணக்கூடியது தான்.
அண்மையில் ஒரு மொட்டை நோடீஸ் கண்ணில் பட்டது
இதை மொட்டை தானே என்று விட்டுவிடவும் முடியவில்லை. முழுமையாக நம்பவும் முடியவில்லை.
இந்தியாவிலிருந்து வருகை தந்த பரதநாட்டிய தாரகைகள் பின்னால் அலைந்த சுவாமிகள் சிலர் பற்றியது.
பாரதிராஜாவுக்கே முதுகு சொறியப்போய் பல்லுடைபட்டவர்கள் பரதநாட்டியத் தாரகைகளைக் கண்டால் 'ஜொள்ளு' விடாமல் இருந்திருப்பார்களா!
இவ்விடையம் யோகர் சுவாமிகள் பெயரில் நடைபெற்றதென்பதே கவலைக்குரிய விடையம்.
"நான் பூசாரியைத் தாக்கினேன்.
கோவில் கூடாதென்பதற்காக அல்ல
அது கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாதென்பதற்காக"
பராசக்தியில் கலைஞர் கருணாநிதியின் வசனம்.
இங்கு பொருத்தமான வசனம்.
இளங்கறுவலுக்கு பிடித்தமான வசனம்.
கடந்த வருடத்தில் கலைந்து போன எழுத்தாளர் இணையத்தின் கற்பனைத்தலைவர் தன் பதவியை நிஜமா என தெரிந்து கொள்ள தன் சகாக்களை ரகசியமாகக் கூட்டினார்.
கூடியவர்கள் எத்தனை பேர் என்பதைவிட கூடியவர்கள் யார் என்பதுதான் மிகசுவாரசியமான விடையம்.
கலைந்துபோன எழுத்தாளர் இணையத்தின் பெயரில் மண்டபம் எடுத்தால் எழுத்தாளர்கள் உசாராகி விடுவார்கள் என்ற அச்சத்தினால் யோகர்சுவாமிகள் சங்கத்தின் பெயரில்தான் கூட்டஅறை பதிவுசெய்து பெற்றுக் கொண்டார்கள்.
கடைசியில் கூட்டத்திற்கு தரிசனம் தந்தவர்கள் இந்த சுவாமிகள் கூட்டந்தான்.
பரதநாட்டிய தாரகைகள் பின்னால் அலைந்த அதே கூட்டம்.
இவர்களுக்கு இளங்கறுவல் சொல்வதெல்லாம் யோகர் சுவாமிகளின் வேதவாக்கு 'சும்மா இரு' என்பதே.
இல்லாவிட்டால் இதே யோகர் சுவாமிகளின் வாய்மொழி தூசனையில் தான் திட்ட வேண்டியிருக்கும்.


அறு சுவைகள்
இனிப்பு
கசப்பு
புளிப்பு
உறைப்பு
உவர்ப்பு
துவர்ப்பு

ஏழாவது சுவை........


அப்சராஸ்

**Restaurant & catering**

2778 KENNEDY RD., SCARBOROUGH, ONTARIO (416) 412 6164




cover design: digi graphics & studios